
www.padippakam.com

ஜனவரி '97 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் ரூ. 4.00

# புதிய கலாச்சாரம்

அறிவியலின் நெற்றியடி



புரட்டலின் சுவிசேசம்

படிப்பகம்

www.padippakam.com

## அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கம் 6வது மாநாடு

# சென்னையில் வசந்தத்தின் இடிமுழக்கம்!

'மக்கள் பண்பாட்டுப் படை ஒன்றில்லாமல் புரட்சி வெல்ல முடியாது' என்றார் ஆசான் மாவோ. இந்தியப் புரட்சி இயக்கத்தின் பண்பாட்டுப் படையாக எழுச்சியுடன் வளர்ந்து வருவது அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு இயக்கம் (AIRLC). அ.இ.பு.ப.இ-ன் ஆறாவது மாநாடு ஆகஸ்டு 9,10 நாட்களில் சென்னையில் நடைபெற்றது.

நக்சல்பாரிக் கனல் மணக்கும் பூக்கள் ஒரே இடத்திலே மணம் வீசின — நக்சல்பாரிக் கட்சியின் முதல் தமிழ்நாடு செயலாளர் தியாகத் தோழர் அப்பு திடலில்; பாட்டாளி வீரன் தோழர் பாலன் அரங்கத்தில்; ஜன நாட்டிய மண்டலியின் மையக் கலைக் குழுவின் தியாகத் தோழர் குமாரி மேடையில்.



• 'கஷ்டஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்' தேசிய மொழிகளில் வீர வணக்க நிகழ்ச்சி •

இந்திய மக்கள் மீதான ஏகாதிபத்தியத் தாக்குதல் கூடுதல் வேகத்தோடு தொடுக்கப்பட்டுள்ள இன்று மிகச் சரியான தருணத்தில் அஇபுபஇ மாநாடு நடந்தது. மாநாட்டின் பொதுப்பொருள் ''ஏகாதிபத்தியத் தாக்குதலும் நமது பண்பாட்டு எதிர்த்தாக்குதலும்''. மாநாட்டைத் தொடங்கிவைத்து முனைவர். கோ. கேசவன் உரையாற்றினார். பொதுச் செயலாளர் வரவர ராவ் அஇபுபஇ-ன் 18 உறுப்பினர் அமைப்புக்களின் செயல்பாடுகளைத் தொகுத்து அமைப்பறிக்கை அளித்தார்.

முதல் நாள் பகலிலும், இரண்டாம் நாள் காலையிலும் மாநாட்டின் பொதுப்பொருளில் கருத்தரங்கம் ஒன்று நடந்தது. 'வணிகமயமாகும் கல்வி' என்ற தலைப்பில் ஆந்திர மக்கள் உரிமைச் சங்கத்தின் துணைத் தலைவர் முனைவர். அர கோபாலும், 'பண்பாட்டுத் தளத்தில் ஏகாதிபத்தியத் தாக்குதல்களும் அறிவுஜீவிகளின் பங்கும்' என்ற தலைப்பில் தோழர் சோமசேகரனும் (ஜனகீய சம்ஸ்காரிக வேதி, கேரளம்); 'சிறைப்பட்ட இலக்கியம்' என்ற தலைப்பில் தோழர் வரவர ராவும், 'உலகமயமாக்கமும் தேசியமும் - பண்பாட்டுச் சவால்கள்' என்ற தலைப்பில் மகஇக செயலாளர் தோழர் மருதையனும், 'தமிழகப் பண்பாட்டு நிலைமைகள்' என்ற தலைப்பில் ம.ப.பே. தோழர் நடராசனும் உரையாற்றினார்கள்.

ஏகாதிபத்தியக் கழிசடை அறிஞர்களிடமிருந்து கடன் வாங்கிக் கடைபரப்பி பின் நவீனத்துவம் போன்ற முதலாளித்துவக் கோட்பாட்டுக் குப்பைகளை அள்ளி வீசி தமிழகத்திலும், அகில இந்திய அளவிலும் குழப்படி வேலை செய்துவரும் சோம்பேறி ஒட்டுண்ணிக் கூட்டத்தையும், விண் வழியேயும் படை எடுத்து நமது பண்பாட்டைத் தாக்கிவரும் ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தையும் ஒன்றுசேரத் திரைகிழித்துச் சாடிய கருத்துக்கள் மாநாட்டில் கலந்துகொண்டவர்களைப் புதிய கலாச்சார ஆயுதபாணிகளாக்கின.

பிருமாண்டமான சிற்பமாக அமைந்த கப்பலின் உள்ளே தியாகிகளின் நினைவுச் சிவப்புத் தூண் அமைக்கப்பட்டிருந்தது எழுச்சிமிக்க காட்சி; அதற்கு ஓர் உயிர் கொடுத்து உலவ விட்டது வீர வணக்க நிகழ்ச்சி - பல்வேறு இந்திய மொழிகளில் வீர உணர்வு கொப்பளிக்க சுப்பாராவ் பாணிக்கிரகியின் 'கஷ்டஜீவிகள் நாங்கள் கம்யூனிஸ்டுகள்' பாடல் இசைக்கப்பட்டது. சிறு அளவே அமைந்தாலும் சிறு பொறியாகத் தீ மூட்டிய ஓவியர் மருது திறந்து வைத்த, (இளம் ஓவியர்கள் புருசோத்தமன், ஹரி, நரேந்திரன், வெங்கட், மருது, புகழேந்தி, வீர. சந்தானம் ஆகியோர் பங்கேற்ற) சிட்டபிரசாத் ஓவிய அரங்கம்; நள்ளிரவுவரை இரு நாட்களிலும் துடிப்போடு பல்வேறு மொழிகளில் நிகழ்த்தப்பட்ட ஆட்டபாட்டமும், நாடகங்களும், கவியரங்கமும் புரட்சி ஆவணங்கள்.

''ஆதிசங்கரரின் சௌந்தரிய லகரியையும் அமெரிக்க ஜாக்சனின் காமாந்தக உளறலையும் பக்குவமாயக் கலப்பதே இங்கே பாரதப் பண்பாடு பக்தியின் ஆபாசத்திற்குச் சங்கர மடங்கள் ஆபாசத்தின் பக்திக்குச் சாட்டலைட்டுகள்'' என்று

தொடர்ச்சி பக்கம் 23...




• மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட செயற்குழுத் தோழர்கள் •



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 14
• குரல்: 3-8
• ஆக. '96 - ஜன. '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# மைக்கேல் ஜாக்சனாக ராமன்! அழகிப் போட்டியில் சீதை!

மலை உச்சி கண்ணில் படும் போது, காலடியில் மண் சரிவதைக் கண்டவன் நிலையில் சிக்கிக் கொண்டு விட்டன ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதாக் கட்சி பரிவாரங்கள். அவை இந்த நாட்டு மக்களிடையே உருவாக்க எத்தனித்த மாயத் தோற்றங்கள் எல்லாம் கலைந்து போய் நிர்வாணமாய் நிற்கக் காண்கிறோம். ''இதோ, காங்கிரசுக்கு நாங்கள் தாம் தேசிய மாற்று. இந்த முறை நிச்சயம் ஆட்சியைப் பிடித்தே தீருவோம்'' என்று கிளம்பிப் பொதுத் தேர்தலுக்கு முன்பு முண்டாசு கட்டினார்கள். ''பெரும்பான்மை பலமின்றி ஆட்சி அமைக்க மாட்டோம். ஆயாராம் காயாராம் அரசியல் எங்களிடம் கிடையாது. குதிரை வியாபாரத்தில் இறங்க மாட்டோம்'' என்று சவடால் அடித்து உத்தம புத்திரர்களாக பாசாங்கு செய்து வந்தார்கள். ஆனால் வாஜ்பாயி தலைமையில் சிறுபான்மை ஆட்சி அமைத்து விட்டு, அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக நடத்திய பல பேரங்களும் பலிக்காமல் போனபோது நாட்டு மக்கள் காரி உமிழ்ந்தனர். அதன்பிறகு குஜராத்தில் அக்கட்சி மந்திரிகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் குத்துவெட்டு, வேட்டி அவிழ்ப்பு ஆகிய எல்லாக் கூத்துகளும் நடத்திக் காட்டினர். சுயநலம்-பதவிக்காக, கோஷ்டிச் சண்டைகள் இல்லாத கட்டுப்பாடும் ஒழுக்கமும் கூடிய கட்சி என்று கூறிக் கொண்டது பொய்த்துப் போனது. அங்கு அதன் ஆட்சி கவிழ்க்கப்பட்டு போட்டிக் கும்பலின் ஆட்சி ஏற்பட்ட போது ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவின் அரசியல் ஒட்டாண்டித்தனம் வெட்ட வெளிச்சமானது.

உ.பி.யில் எதிர்த் தரப்பினர் பிளவுபட்டுள்ள நிலையில், எப்படியாவது மீண்டும் அங்கு ஆட்சியைப் பிடித்து விடுவோம் என்ற அதன் பகற்கனவு பலிக்கவில்லை. சட்டமன்றத்தில் பெரிய கட்சியாய் இருந்தாலும் வெளியிலிருந்து கொஞ்சம் கூட ஆதரவு திரட்ட முடியாமல் தனிமைப்பட்டு போய், தானும் பெரும்பான்மைபெற முடியாதவாறு தேக்க நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. பதவிமோகம் தலைக்கேறிய மாநில பாரதீய ஜனதாவின் கல்யாண் சிங் தலைமையில் ஒரு பிரிவு எப்படியாவது மந்திரி பதவியை அடைந்து விடத் துடிக்கிறது. குஜராத்தில் நடந்ததைப் போல அது கட்சியைப் பிளவுபடுத்திக் கொண்டு வெளியேறி, எதிர்த் தரப்புடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்து விடுமோ என்று மத்தியத் தலைமை கலவரம் அடைந்துள்ளது. என்ரான் ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, மீண்டும் பேரம் நடத்தி மறுஒப்பந்தம் போட்டபோது அதன் சுதேசி சாயம் வெளுத்துப் போனது.

மும்பையில் நடந்து முடிந்த ஏகாதிபத்தியக் கழிசடைக் கலாச்சார நாட்டியக்காரன் மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சி, சினிமாத் தரகு முதலாளி அமிதாப் பச்சன் பெங்களூரில் நடத்தும் உலக அழகிப் போட்டி ஆகிய இரண்டு விவகாரங்களில் அவர்களுடைய இரட்டை வேடம் பளிச்சென்று தெரிந்தது. சிவசேனா தலைவர் பால் தாக்கரே குடும்பம் ''சிவ் உத்யோக் சேனா'' என்ற பெயரில் ஒரு அறக்கட்டளையைப் பதிவு செய்து கொண்டு, மைக்கேல் ஜாக்சனைக் கொண்டு வந்து, ஆபாச-வக்கிர நடன நிகழ்ச்சி நடத்தி,பல கோடி ரூபாய் அறக்கட்டளை நிதியென்று சொல்லி சுருட்டிக் கொண்டது. அதை எதிர்க்கத் துணிவின்றி இரட்டை வேடம் போட்டது ஆர்.எஸ்.எஸ்.-பாரதீய ஜனதா கும்பல். அதன் வசூலுக்கு 11.5 கோடி ரூபாய்க்கு வரிவிலக்குக் கொடுத்து, அரசு எந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சியை நடத்த அனுமதித்தது, சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டணி அரசு. அதிலொன்றும் தவறில்லை என்று வக்காலத்து வாங்கினர், பா.ஜ.க.வின் துணைமுதல்வர் கோபிநாத் முண்டேயும் அதன் மும்பை தலைவர் புரமோத் மகாஜனும். ஆனால் ஆர்.எஸ்.எஸ்.ன் சுதேசி அமைப்போ, ''வக்கிரமானவனைக் கொண்டு வந்து மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறார்கள்'' என்று கூறுகிறது. ''திருமணமில்லாமலே குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்ற சொல்லும் உமாபாரதி போன்ற பேர்வழிகளை வைத்திருக்கும் பாரதீய ஜனதா ஒன்றும் எனக்கு பாரதப் பண்பாடு பற்றிச் சொல்லித்தரத் தேவையில்லை'' என பால்தாக்கரே பதிலடி கொடுத்தார். அப்புறம் ஆர்.எஸ்.எஸ். கும்பல் வாய்பொத்திக் கொண்டது.

உலக அழகிப் போட்டி நடப்பதற்கு கர்நாடகா மாநிலத்தில் கடுமையான எதிர்ப்பு ஓங்கியுள்ளது. அங்கு எதிர்க்கட்சியாக உள்ள பாரதீய ஜனதா கட்சிஅதை அறுவடை செய்து கொள்ளும் முகமாக உலக அழகிப் போட்டியைத் தானும் எதிர்ப்பதாக நடாகமாடுகிறது. கட்சியின் மாணவர், மகளிர் பிரிவுகள் எதிர்ப்பு அறிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள், ஆபாச எதிர்ப்பு தினம் நடத்துகின்றன. கட்சியின் எம்.பியோ அழகிப் போட்டி நடத்துவதில் தவறில்லை என்கிறார். அழகிப் போட்டி நிகழ்ச்சிகளை வானொளிப் படப்பிடிப்பு நடத்துவதோ அதன் மாணவர் பிரிவைச் சேர்ந்தவர்கள்தாம். இசுலாமிய எதிர்ப்பு இந்து வெறியைத் தூண்டக் கூடியது என்பதால் பொள்ளாச்சியில் இறைச்சிக் கூடம் அமைவதை எதிர்ப்பதிலும் பசுவதை தடைக்கோரி யாத்திரை நடத்துவதிலும் முனைப்புக் காட்டும் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கும்பல் மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சி, உலக அழகிப் போட்டி ஆகியவற்றை எதிர்ப்பதாக ஒப்புக்கு நடிப்பதன் மூலம் அதன் தேசிய - பாரதீய பக்தி வேடம் அம்பலமாகி விட்டது. இப்படி அரசியல், அமைப்பு, சித்தாந்தம்-கலாச்சாரம் ஆகிய சகல துறைகளிலும் அம்பலமாகி தேக்கநிலைக்கும் நெருக்கடிக்கும் ஆர். எஸ். எஸ்.-பாரதீய ஜனதாக் கட்சி கும்பல் தள்ளப்பட்டுள்ளது. இருந்தாலும், காங்கிரசும் பலவீனப்பட்டு, எதிர்க்கட்சிகளும் ஒரு தற்காலிகக் கூட்டணி ஆட்சி நடத்துவதால், மீண்டும் மதவெறி கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு ஆதாயம் தேடவே எத்தனிக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

படிப்பகம்

www.padippakam.com



மயக்கமடையத் தொடங்கினாள். இன்ஸ்பெக்டர் மீண்டும் ஒரு முறை அத்தையிடம் வந்து பேசினார். அவளுக்கு எங்கே கேட்டிருக்கும்?

பிறகு அத்தையை சிதையின் மீது ஏற்றி கணவனின் பிணத்துக்கு அருகில் படுக்க வைத்தனர். ஒரு கையை கணவனின் தலைக்குக் கீழும், இன்னொரு கையை அவன் மார்பின் மீதும் வைத்து அணைத்தபடி படுத்திருந்தாள். ஹரி... ஹரி... என்ற முனகல் அவள் வாயிலிருந்து கேட்டது.''

''பெண்ணே எழுந்திரு. உன் கணவன் இறந்து விட்டான். நீ அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் முடிந்தன. இந்த உலகத்தில் உன் வாழ்க்கையைத் தொடர வந்துவிடு'' என்று யாரேனும் ஒருவர் அந்த நேரத்தில் சொல்ல வேண்டும் என்பது சம்பிரதாயம். யாரும் சொல்ல வில்லை.

''அத்தையின் மீது உடனே விறகுகளை அடுக்கினார்கள். தடியான ஒரு ஆள் விறகுகளை ஒரு அமுக்கு அமுக்கினான். சிதையைச் சுற்றியிருந்த மூங்கில்கள் சடசடவென எரியத் தொடங்கின. ஒரு உடலும், இன்னொரு உயிரும் சாம்பலாகும் வரை சுற்றியிருந்தவர்களின் கத்தல் ஓயவில்லை.''

வார்த்தைகளால் விவரிக்க முடியாத இந்தக் கொடூரத்தை, கட்டாயப்படுத்தி நிறைவேற்றும் உரிமையை மன்னர்களும், புரோகிதக் கும்பலும் மன்றாடிக் கேட்டபோதும் பெண்டிங் செவி சாய்க்கவில்லை.

புரோகிதர்கள் தங்கள் மனுவில் குறிப்பிடாமல் விட்ட ஒரு சம்பிரதாயத்தை பெண்டிங் குறிப்பிட்டார். ''உடன் கட்டையேறும் தாயை உயிருடன் கொளுத்துவது மகனின் கடமை. ஒரு வேளை அவள் குழந்தையில்லாத இளம் விதவையாக (சிறுமியாக) இருந்தால், தன்னை யார் கொளுத்தவேண்டும் என்பதை அவள்தான் கூறவேண்டும்'' என்பதே அந்த சம்பிரதாயம்.

ரூப் கன்வருக்கும் மகன் இல்லை. அவளுக்குத் திருமணமாகி ஒரு ஆண்டு கூட ஆகவில்லை. எனவே அவளை உயிருடன் கொளுத்தும் பொறுப்பை மைத்துனன் ஏற்றுக் கொண்டான். சுற்றிலும் நூற்றுக்கணக்கான ராஜபுத்திரர்கள் நின்று 'சதி மாதா கி ஜெய்' என்று ஆர்ப்பரிக்க அவன் ரூப் கன்வருக்குத் தீ வைத்தான்.

தீயின் நாக்குகள் தன்னைத் தீண்டத் தொடங்கியதும் அவள் சிதையிலிருந்து தப்பி ஓட முயற்சித்தாள். ஆனால் கையில் வாளுடன் சிதையைச் சுற்றி நின்ற ராஜபுத்திர இளைஞர்கள் அவள் தப்பிவிடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

இவையெல்லாம் பம்பாய் பத்திரிகையாளர் குழுவொன்று சம்பவம் நடந்தவுடனே தியோரலா சென்று நேரில் திரட்டிய செய்திகள். ரூப் கன்வருக்கு போதை மருந்து கொடுத்திருந்தார்கள் என்பதும் அவர்கள் முன் வைத்த ஒரு குற்றச்சாட்டு.

சுடுகாட்டுக்குப் பெண்கள் செல்வது 'இந்து' பாரம்பரியம் இல்லையே. ரூப் கன்வர் ஏன் சென்றாள்?

அவ்விளை புடவை, நகைகள் அணிவித்து அலங்கரித்தவர்கள் யார்?

அவளை உடன்கட்டை ஏற்றுவதற்கு முன்னால் அவளுடைய பெற்றோருக்குக் கூட செய்தி தெரிவிக்காததன் மர்மம் என்ன?

என்று பல கேள்விகள் எழுப்பப் படுகின்றன. எனினும் கண்ணால் கண்ட சாட்சிகள் யாரும் இல்லையென்ற காரணத்தால் நீதிமன்றம் குற்றவாளிகளை விடுதலை செய்துவிட்டது. போலீசு தரப்பு சாட்சிகளே தங்கள் கூற்றை மறுத்து விட்டதால் வழக்குக்கு எந்த ஆதாரமும் இல்லையென்று தள்ளுபடி செய்துவிட்டார் நீதிபதி.

''நீதி வென்றது. ஒரு வேளை அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால் இந்திய ராணுவத்தின் 'ராஜபுத்திரர் ரெஜிமெண்ட்' கலகத்தில் இறங்கியிருக்கும்'' என்று எச்சரிக்கிறார்கள் தியோரலாவின் ராஜபுத்திரர்கள்.

''இதுவரை 8 'சதி' வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டோருக்காக ஆஜராகியிருக்கிறேன். எல்லாவற்றிலும் நான் தான் ஜெயித்தேன். யாரும் தண்டிக்கப் பட்டதில்லை'' என்று மார்தட்டுகிறார் குற்றவாளிகளுக்கு ஆஜரான வழக்கறிஞர்.

''குற்றவாளிகளைத் தப்பவிடுவதற்காக போலீசு திட்டமிட்டே வழக்கில் ஏகப்பட்ட ஓட்டைகளை உருவாக்கி வைத்திருந்தது'' என்று குற்றம் சாட்டுகிறார்கள் மகளிர் அமைப்பினர்.

''நீதிபதி மனம் வைத்திருந்தால் குற்றவாளிகளைத் தண்டிக்கும் வாய்ப்பு

''இந்தப் பாரம்பரியம் எங்கள் உயிரினும் மேலானது. உடன்கட்டையேறி உயிர் துறக்கும் விதவையானவள், உடலில் எத்தனை மயிர்க்கால்கள் உள்ளனவோ அத்தனை ஆண்டுகள், $3\frac{1}{2}$ கோடி ஆண்டுகள் சொர்க்கத்தில் வாழ்வாள்''.

உடன் கட்டையேற்றும் பழக்கத்துக்கு எதிராக பிரிட்டிஷ் பிரபு பெண்டிங் கொண்டு வந்த சீர்திருத்தச் சட்டத்தை விலக்கிக் கொள்ளக் கோரி மன்னர்களும், 120 பார்ப்பனப் பண்டிதர்களும் கை ஒப்பமிட்டு அளித்த மனுவில் கண்டுள்ள வாசகம் இது. விதவை வாழ்க்கையின் துன்பங்களையும், கட்டுப்பாடுகளையும் ஒப்பிடும்போது 'சிறிது நேரம் சிரமப்பட்டாலும்' போய்ச் சேர்ந்து விடுவதே ஒரு பெண்ணுக்கு நல்லது என்ற உண்மையையும் அந்த மனுவில் அவர்கள் குறிப்பிடத்தவறவில்லை.

தமது விருப்பத்துக்கு விரோதமாக ஒரு பெண்ணை உடன்கட்டையேற்றக்கூடாது என்று கூறிய அந்தச் சட்டம் நடைமுறையில் அமல்படுத்தப்பட்ட விதத்தை - உடன்கட்டையேறும் காட்சியை - எஸ்.ஸி போஸ் (1881) கூறுகிறார்:

''நான் சிறுவனாக இருந்தபோது அத்தை உடன் கட்டையேறிய காட்சியை அழுது கொண்டே அம்மா என்னிடம் கூறியிருக்கிறாள்.

சவ ஊர்வலம் சுடுகாட்டை அடைந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் அத்தையிடம் வந்து உடன்கட்டையேற வேண்டாம் என்று எடுத்துச் சொன்னார். பயனில்லை. கொஞ்சம் தள்ளி நின்று என்ன நடக்கிறது என்று கண்காணிக்கத் தொடங்கினார். சிதையை 7 முறை சுற்றிவருமாறு புரோகிதர்கள் அத்தையிடம் கூறினர். ஒவ்வொரு சுற்று வரும்போதும் அவளுடைய கால்கள் தள்ளாடத் தொடங்கின.

## ★ ஒரு கொலை
## ★ ஒரு தற்கொலை



படிப்பகம்

www.padippakam.com

இந்த வழக்கிலேயே இருந்தது'' என்று முனகுகிறார்கள் அரசு வழக்கறிஞர்கள்.

''மகளிர் அமைப்பினர் சொன்னதைக் கேட்டு இதைக் 'கொலை வழக்கு' என்று பதிவு செய்ததுதான் தவறு. ''தற்கொலைக்குத் தூண்டுதல்'' என்ற குற்றப் பிரிவில் வழக்கு போட்டிருந்தால் ரூப் கன்வர் கொளுத்தப்பட்ட போது அங்கே வேடிக்கை பார்த்தவர்கள் உள்ளிட்டு எல்லோரையும் உள்ளே தள்ளியிருக்கலாம். 'சதி ஊர்வலத்தில் பங்கேற்பவர்களும் தற்கொலையைத் தூண்டும் குற்றத்தைச் செய்தவர்களே' என்று கூறும் உயர்நீதி மன்றத் தீர்ப்பொன்று ஏற்கனவே உள்ளது '' என்று புது வியாக்கியானம் தருகிறார்கள் டெல்லி வழக்கறிஞர்கள்.

''தியோராலா சம்பவத்துக்குப் பிறகு 'சதி'க்கெதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டம் ரொம்பக் கடுமையானது. 'சதி'யை ஆதரிப்பவர்கள் உள்ளிட்டு எல்லோரையும் இச் சட்டத்தின் மூலம் தண்டித்து விட முடியும். எனவே இனி குற்றவாளிகள் தப்ப முடியாது'' என்கின்றனர் ராஜஸ்தான் அதிகார வர்க்கத்தினர்.

ஆனால் ரூப் கன்வர் கொளுத்தப்பட்ட இடம் சதி ஸ்தல் என்ற புனிதத் தகுதியுடன் தான் இருந்து வருகிறது. ரூப் கன்வர் கொளுத்தப்பட்ட நாளில் ஆண்டுதோறும் 'சுன்ரி மகோத்ஸவ்' என்ற விழா நடத்தப்பட்டுத்தான் வருகிறது. முதல் ஆண்டு விழாவில் ராஜஸ்தான் பா.ஜனதா முதல்வர் செகாவத் பங்கேற்றார்.

'பாரம்பரியமிக்க' தலைப்பாகையுடன் கையில் வாளேந்திய ராஜபுத்திர இளைஞர்கள் தங்கள் குலப் பெருமையை நிலைநாட்டும் அடுத்த சதிமாதாவைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

• • •

தமிழ்த் திரையுலகம் அடுத்த சுமிதாவைத் தேடிக் கொண்டிருக்கிறது. கற்பும் விபச்சாரமும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் தானே!

கொலையா தற்கொலையா என்ற ஆராய்ச்சி இங்கேயும் தொடர்கிறது. இருப்பினும் தற்கொலை தான் என்று கோப்பினை மூடி விட்டது காவல்துறை.

தற்கொலை என்றே வைத்துக் கொண்டாலும் ரூப் கன்வரைத் தற்கொலைக்குத் தூண்டிய குற்றவாளிகளைப் பிடிக்க முடியாதது போலவே, சுமிதாவைத் தற்கொலைக்குத் தூண்டிய குற்றவாளிகளையும் பிடிக்க முடியவில்லையாம்.

ஆனால் இறந்த மறுநாளே சுமிதா உயிர்த்தெழுந்தாள் - பத்திரிகைகளிலும், திரையரங்குகளிலும். ஆனால் இப்பொழுதும் அவளுக்கு முழு ஆடையை அனுமதிக்க பத்திரிகைகள் தயாராக இல்லை. இருப்பினும் எல்லோரும் கண்ணீர் வடிக்கத் தவறவும் இல்லை.

அது வேசியைச் சாகக் கொடுத்த விடுதிக் காரியின் கண்ணீர். தரகுக் காசை இழந்த தரகனின் கண்ணீர். அவளுடன் கழித்த நாட்களை எண்ணி வாடிக்கையாளன் வடிக்கும் கண்ணீர்.



கண்ணீர் வற்றியது. தற்கொலைக்கு யார் காரணம் என்று கண்டுபிடிக்கப் போதிய ஆதாரமில்லாததால், எது காரணம் என்ற உளவியல் ஆய்வில் இறங்கினார்கள்.

''சுமிதாவுக்குப் போதிய படிப்பறிவு இல்லை அதுதான் காரணம்'' என்றார் நடிகை சுகாசினி. இனி கல்வியறிவு இல்லாத யாரையும் கவர்ச்சி நடிகையாக்கக் கூடாது என்று தான் கோடம்பாக்கத்தின் முடிவோ!

அல்லது விபச்சாரம், அவமானம், ஆணாதிக்கம், முகத்துதி, துரோகம், நடிப்பு, நயவஞ்சகம் போன்ற திரையுலகின் அத்தனை இழிவுகளையும் தாங்கிக் கொண்டு உயிரோடிருப்பதற்குத் தேவையான அறிவைக் கல்வி அளித்து விடுமா?

இதே - நியாயத்தை ரூப் கன்வருக்கும் பொருத்தலாம். தீயில் வெந்தது அவளுடைய மூட நம்பிக்கையின் விளைவு என்று வழக்கை முடித்து விடலாம். அதைத்தான் ராஜபுத்திரர்களும் விரும்புகிறார்கள்.

| ரூப் கன்வர் | சுமிதா |
| --- | --- |
| உதிர்ந்த பொட்டில் | உதிர்ந்த துணியில் |
| உயிருடன் சிதையில் | உயிருடன் கயிற்றில் |
| சதியின் காவல் | கலையின் காவல் |
| சட்டம், சநாதனம். | திரையின் தரகன் |

''உடன் கட்டைப் பழக்கத்திற்காக இந்து மதத்தை ஏன் சாடுகிறீர்கள்? எல்லோருமா உடன் கட்டை ஏறுகிறார்கள்'' என்று கேட்கிறார்கள் இந்து சனாதனிகள்.

''சுமிதாவின் தற்கொலைக்காகத் திரையுலகத்தை ஏன் குற்றம் சொல்கிறீர்கள், எல்லோருமா தற்கொலை செய்து கொள்கிறார்கள்'' என்பதுதான் சுகாசினி வகையறாவின் வாதம்.

சாக்கடையைக் குற்றம் சொல்லாதீர்கள். கொசுவர்த்தி வைத்துக் கொள்ளுங்கள். எத்தனை கிருமிகளுக்கும், புழுக்களுக்கும் இந்தச் சாக்கடை வாழ்வளிக்கிறது!

சுமிதா போன்ற கல்வியறிவற்றவர்கள் எதிர்காலத்தில் தற்கொலை செய்து கொள்ளாமல் தடுக்க தாய்லாந்தின் முன்னுதாரணத்தைக் கோடம்பாக்கமும் பின்பற்றலாம்.

தென்கிழக்காசியாவின் விபச்சார விடுதி என்று புகழ் பெற்ற தாய்லாந்தில் எயிட்ஸ் நோய் தலைவிரித்தாடுகிறது. எயிட்ஸ் நோயைக் கொண்டு வந்தவர்கள் அமெரிக்கர்கள்தான் என்பதால் லட்ச ரூபாய் கொடுத்தாலும் அமெரிக்க வாடிக்கையாளரை அனுமதிக்க மாட்டோம் என்கிறார்களாம் தாய்லாந்தின் படிப்பறிவற்ற விலை மாதர்கள்.

கல்வியறிவற்ற விலை மாதர்களால் தோன்றியுள்ள இந்த நெருக்கடியைச் சமாளிக்க அவர்களுக்கு 'எயிட்ஸ் கல்வி' அளிக்கும் பொருட்டு விளக்கப் படங்களுடன் கூடிய கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளதாம் ஒரு தொண்டு நிறுவனம்.

அமெரிக்கர்கள்தான் எயிட்ஸ் பேர்வழிகள் என்பது தவறு. யார் வேண்டுமானாலும் அப்படி இருக்கலாம். எனவே அமெரிக்கர்களை மட்டும் புறக்கணிப்பது தவறு. நாம் எச்சரிக்கையாக இருப்பதும், ஆணுறையைப் பயன்படுத்தச் சொல்வதும்தான் தீர்வு என்கிறது அந்த எயிட்ஸ் 'கல்வி' நூல்.

எயிட்சுக்கெதிரான அமெரிக்கப் பிரச்சார முழக்கமும் இதுதான்; ''விளையாடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை; ஆனால் பாதுகாப்பாக விளையாடுங்கள்''

இதைத்தான் சுகாசினியும் சொல்கிறார். ஆனால் தியோராலாவின் ராஜபுத்திரர்கள் கேட்கிறார்கள், ''பாதுகாப்பாகக் கொளுத்துவது எப்படி?''

• பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# விளிம்பு நிலைக் கோட்பாடும் மைக்கேல் ஜாக்சனின் கலகமும்

ஒரு விநாடியின் பின்ன அளவு நேரத்தில் என் மூளையில் ஒரு பொறி தட்டியது. விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையின் மீதும் பண்பாட்டின் மீதும் மிக அதிகமாகவே கரிசனப்பட்டவர் புரட்சித்தலைவர், முனைவர், ம.கோ.ரா. (அவர்தான் எம்.ஜி.ஆர்.) அவருக்குப் பிறகு அவரை விடக் கூடுதலாகவே கரிசனப்படும் அறிஞர் அந்தோனிசாமி மார்க்ஸ தான் எவ்வளவு சரியான, நிதர்சனமான பின் நவீனத்துவம் என்கிற தத்துவத்தை முன் வைத்துப் போராடுகிறார். புரட்சிக் கவிஞர் இன்குலாப் அவர்கள் தான் எவ்வளவு தீர்க்கதரிசனமான அருள்வாக்குப் பொழிந்துள்ளார். இவ்வளவு காலமும் இந்த உண்மையைப் புரிந்துக் கொள்ளாமல் வீணாய்க் கழித்து விட்டோமே என்று அந்தப் பொறி தட்டிய போது என் நெஞ்சம் வேதனைப்பட்டது.

''பொப்''பிசையின் அரசனல்ல, பேரரசன் என்றழைக்கப்படும் அகில உலகப் புரட்சித் திலகம் மைக்கேல் ஜாக்சன். இந்த மண்ணில் அவர் தனது திருப்பாதங்களை வைத்து, மராத்திய இனத் தலைவர், சிவசேனாவின் சத்ராபதி பால் தாக்கரேயின் மாளிகைக் கழிப்பறையில் மூத்திரம் பெய்து புனிதப்படுத்தியதில் இருந்து (அப்படிச் சொல்லித்தான் பெருமைப்பட்டுக் கொண்டான் பால்தாக்கரேயின் மருமகன் ராஜ்தாக்கரே) பம்பாய் பெருநகரின் விளிம்பு நிலை மக்களை ஒரு மாற்றுக்கலாச்சாரத்துக்கு வென்றெடுத்து விட்டுப் போன இந்த நூற்றாண்டின் சரித்திர முக்கியத்துவம் மிக்க நிகழ்ச்சியைப் படித்தபோதுதான் என்னுடைய மூளையில் அந்தப் பொறித் தட்டியது.

விளிம்பு நிலை மக்களின் ஒரு பெரும்பகுதியான பெண்களின் மீதான பாலியல் ஒடுக்குமுறையை எதிர்த்துக் கலகம் புரியும் வகையிலேயே ''பொப்பிசைப் பேரரசி'' மடோனா சிலுவையை வைத்துக் கொண்டு சுய இன்பம் காண்பதாக பாவனை செய்வதைக் காண வேண்டும் என்று அறிஞர் அந்தோணி சாமி மார்க்ஸ இனங் காட்டியபோது இதை நான் உணரத் தவறினேன். இதே போல மைக்கேல் ஜாக்சன் மாற்றுக் கலாச்சாரத்தின், விளிம்பு நிலை மக்களிடையே கலக உணர்வைத் தூண்டும் பிரதிநிதியாகவே இந்த நாட்டுக்கு வந்து போனார்.



நாகரிக, அதிகாரபூர்வ அமெரிக்க ஏகாதிபத்தியம் கேடானதென்று சொல்லித் தடை விதித்துள்ள போதைக் கலாச்சாரத்தின் நாயகர்களில் ஒருவர் மைக்கேல் ஜாக்சன். அந்த அதிகாரபூர்வ சமூகமும், நீதியும் எதிர்க்கும், ஒடுக்கும் ஓரினச் சேர்க்கை - அதுவும் சிறுவர்களுடனான உறவு மூலம் பாலியல் ஒடுக்குமுறைக்கு எதிராகக் கலகம் செய்பவர்.

கம்யூனிச - சோசலிச நாடுகள் எனக் கூறிக் கொள்ளும் சீனாவும் கொரியாவும், இசுலாமியப் பழமைவாத நாடுகளும் தமது அதிகாரபூர்வ, மரபுக் கலாச்சாரத்தின் எதிரி என முத்திரை குத்தி மைக்கேல் ஜாக்சனைத் தடை செய்துள்ளன. இந்துமதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ்-இன் அறிவு ஜீவிகளுக்கான அமைப்பு சுதேசி ஜாக்ரான் மாஞ்ச். இது மைக்கேல் ஜாக்சனின் நிகழ்ச்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது. மைக்கேல் ஜாக்சனின் நிகழ்ச்சியை முன்னின்று நடத்திய சிவசேனா இந்தியப் பண்பாட்டிற்கு துரோகம் செய்துவிட்டதாக சாடிய அதன் தலைவர், ''ஒரு வக்கிரக் காரனை அவர்கள் கொண்டு வருகிறார்கள்; அதன் மூலம் ஒரு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறார்கள்'' என்று சாடினார்.



பியா தாக்கர்

'பார்ப்பன சனாதனத்தின் ஊதுகுழல் துக்ளக் ''சோ'', ''என்னைப் பொறுத்தவரையில் அவருடைய சங்கீதம் வெறும் கூச்சலே; அவருடைய நடனம் வலிப்பின் இழுப்புகளே'' என்று மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சி பற்றி எழுதியுள்ளார்.

இவ்வாறு ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களால் வெறுத்துச் சாடப்படும் ஒரு கலாச்சாரத்தின் சின்னமாக விளங்குபவர் தான் மைக்கேல் ஜாக்சன். அதைவிட முக்கியமாக பாரதீயப் பண்பாடு என்று அவர்களால் போற்றப்படும் தந்தை வழிச் சமூகத்தின் அதிகாரத்தையும், ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய விழுமியங்களையும் பாலியல் ஒடுக்கு முறைகளையும் தகர்த்து விட்டு விடுதலைக்கான மாற்றுக் கலாச்சாரப் பாதையில் பின் தொடருமாறு விளிம்பு நிலையில் மட்டுமல்ல, மையத்திலே கூட வாழும் இளைஞர்களையும், இளைஞிகளையும் செயல்பூர்வமான முறையில் தட்டி எழுப்பி விட்டார் மைக்கேல் ஜாக்சன். இது உண்மையில் பார்ப்பன சனாதன அதிகாரம், ஒழுக்கம் மற்றும் பாலியல் தளைகளைக் கட்டறுக்க வேண்டியதன் அவசியத்தை முதன்மைப்படுத்தும் அறிஞர் அந்தோணிசாமி மார்க்சின் பின் நவீனத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி தானே!

கடந்த நவம்பர் முதல்நாளன்று, பம்பாய் புறநகரில் உள்ள அந்தேரி விளையாட்டு வளாகத்தில் நடந்த மைக்கேல் ஜாக்சனின் நிகழ்ச்சிக் காட்சிகள் விளிம்பு நிலை மக்களின் எழுச்சிக்கு சான்று கூறுவனவாக அமைந்தன.

மைக்கேல் ஜாக்சனைக் கட்டிப்பிடித்து நடனமாட வாய்ப்புக் கிட்டிய பியா தாக்கர் என்ற 15 வயது பள்ளி மாணவி தனது வாழ்நாள் கனவு பலித்துவிட்டதாகவும், பிறவிப் பயனை அடைந்துவிட்டதாகவும் மகிழ்ச்சியில் மிதக்கிறாள். பின் வருமாறு பேட்டியும் அளித்திருக்கிறாள்.

● கடைசியில், விழித்துக் கொண்டாயா, பியா?

★ நடந்தவை எதையும் உண்மைதானா



படிப்பகம்

www.padippakam.com

என்பதை என்னால் நம்பவே முடிய வில்லை அதுதான் என் வாழ்க்கையின் ஒரே இலட்சியமாக இருந்தது. அதை நான் அடைந்துவிட்டேன்.

• அது எப்படி நடந்தது?

★ நான் முன் வரிசையில் கதறிக் கொண் டும் கூச்சலிட்டுக் கொண்டும் இருந்தேன். ''நீ அவரது அதி தீவிர ரசிகையாகத் தெரி கிறாய், உன் வாழ்க்கையிலேயே அரிய தான ஒரு வாய்ப்பை உனக்கு நான் தரு வேன்'' என்று அவரது குழுவில் ஒருவர் சொன்னார். அவர் அப்படியே என்னை அள்ளிக் கொண்டு போய் மேடையில் இறக்கிவிட்டார். அதன்பிறகு மைக்கேல் என் முன் மண்டியிட்டார், என்னோடு நடனமிட்டார், ஆனால் நான் விடாமல் அவரைப் பிடித்துக் கொண்டு ''நான் உன் னைக் காதலிக்கிறேன்; நான் உன்னைக் காதலிக்கிறேன்'' என்று திரும்பத் திரும் பச் சொன்னேன். மேடையில் இருந்து நான் இறக்கிவிடப்பட்ட பிறகு மக்கள் என் காலைத் தொட்டுக் கும்பிட்டார்கள், என் கரங்களில் முத்தமிட்டனர்.

• இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?

★ எவ்வளவு காலம் முடியுமோ, அவ்வளவு காலத்திற்கு நான் குளிக்கப் போவதில்லை. சாகும் நாள் வரை என்னுடைய கருநீல ஜீன்ஸ் காற்சட்டையையும், கையில்லாத என் கருநிற மேல் ரவிக்கையையும் வெள்ளை இடுப்புப் பட்டியையும் பாதுகாப் பேன்.

• 5000 ரூபாய் கட்டண அனுமதிச்சீட்டு எப்படிப் பெற முடிந்தது?

★ என் அப்பா பணம் கொடுத்தார். வெளிப்படையாகச் சொல்வதென்றால் மைக்கேல் ஜாக்சனுக்கான விலை மதிப்பே கிடையாது.

• மைக்கேல் ஜாக்சன் உன் தலைமு றைக்கு மிகவும் முந்தியவராகத் தெரிய வில்லையா? (உன் வயதுக்கு அவர் கிழ வராகத் தெரியவில்லையா?)

★ எந்த வகையிலும் அப்படி இல்லை. அவர் மிகச் சிறந்த அழகானவர்; மிக மிகச் சிறந்த அழ கானவர்; மேலும் மேலும் சிறந்த அழகானவராகி வருகிறார். பூமி யில் வாழும் எல் லாவற்றிலும் மிக மிக அற்புதமான வர்.

பியா தாக் கர், ஏதோ ஒரு விடலைச் சிறுமி, அவளது உள றலை ஒரு காரிய மாக எடுத்துக் கொள்ளலாகாது என்று உதாசீனப் படுத்திவிட முடி யாது. மைக்கே லுடன் ஆடிய அவளது காலைத் தொட் டுக் கும்பிடவும், கைகளை முத்த மிடவும், இடை விடாது அவ ளைத் தொலை பேசியில் அழைத்துப் பாராட்டவும் ஆயிரக்கணக் கான இளைஞர்களும் இளைஞிகளும் துடிக்கின்றனர். (எம்.ஜி.ஆரின் எச்சில் சோடாவைக் குடிப்பதற்கு பெண்களி டையே எழுந்த ஆசையும், அவரது படத் தைத் தமது தொடைகளில் பச்சை குத்திக் கொண்டதும் பியா தாக்கர் போன்றவர்க ளின் உணர்வும் ஒன்றுதானே!)

> ''மாற்றுக் கலாச்சாரம் மனைதரின் பின் தொடருமாறு விளிம்பு நிலையில் மட்டுமல்ல, மையத்திலே வாழும் இளைஞர்களையும், இளைஞிகளையும் செயல்பூர்வமான முறையில் கட்டி எழுப்பி விட்டார் மைக்கேல் ஜாக்சன்''




அதுமட்டுமல்ல, மைக்கேல் ஜாக் சன் நிகழ்ச்சி துவங்குவதற்கு 10 மணி நேரம் முன்பாகவே ஆயிரக்கணக்கான இளைஞர்களும் இளைஞிகளும் வந்து குவிந்து விட்டனர். ''எங்களிடம் டிக் கெட் வாங்கும் அளவுக்கு வசதி இல்லை. ஆனால் அவர் நடனமாடப்போகும் இந்த மைதானத்தில் நடந்தாலே மனநி றைவுதான்'' என்று சொல்லிக் கொண்டு அங்கே நாள் முழுவதும் திரிந்தார்கள் பள்ளி மாணவிகள். இளைஞர்களும், இளைஞிகளும் காலையில் இருந்தே உயர் வகை சாராய மும், போதை மருந்தும் ஏற்றிக் கொண்டனர். நிகழ்ச்சியின் போது ஒழுக்கம் சம்பந்தப்பட்ட தடைகள் எதை யும் அவர்கள் மதிக்கவே இல்லை. அவர் கள் உற்சாக மிகு தியில் வெறு மனே கூச்சலிட்ட னர் என்று கூற முடியாது. கதறி னர், துடித்தனர், உணர்ச்சிக் கொந்தளிப்பில் அறற்றினர்.

> ''நிகழ்ச்சியின் போது ஒழுக்கம் சம்பந்தப்பட்ட தடைகள் எதையும் அவர்கள் மதிக்கவே இல்லை. அவர்கள் உற்சாக மிகுதியில் வெறுமனே கூச்சலிட்டனர் என்று கூற முடியாது. கதறினர், துடித்தனர், உணர்ச்சிக் கொந்தளிப்பில் அறற்றினர்.''

''மைக் கேல் ஜாக்சனின் தனி செக்யூரிட் டிப் படையும் மகாராஷ்டிரா மாநிலத்தின் 1500 போலீசுக்காரர்களும் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் உல கம் முழுக்க சப்ளை செய்கிற அளவுக்கு மைக்கேல் ஜாக்சனின் முகத்தில் இருந்து லிப்ஸ்டிக்கை வழித்து எடுத்திருக்க முடி யும்! அந்த அளவுக்கு மைக்கேல் ஜாக் சனை ஒரே ஒருமுறை கட்டிப் பிடித்து கன்னத்தில் 'பச்சக்' அடித்துவிட மும்பையின் இளம் பெண்கள் முட்டி மோதினார்கள்! மைக்கேல் ஜாக்சனின் இசை நிகழ்ச்சிக்கு டிக்கெட் வாங்க, பெற்றோர் பணம் கொடுக்காத காரணத்தால் மருத்துவமனைக் குப் போகும் அளவுக்கு ஒரு பெண் தன் உடம்பை பிளேடால் கீறி ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டார்!'' என்று செய்து தரு கிறது, ஆனந்த விகடன்.

இந்த நாட்டில் பார்ப்பன சனாதன இந்து தருமம், மனுதர்ம நியதி அதிகாரபூர்வமாகவும் நுண்தளத்தி லும் பெண்ணினத்தின் மீது சுமத்தியிருக் கும் ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் பாலா திக்கம் ஆகியவை அடங்கிய பண்பாட் டுக்கு நேரெதிரான விடுதலை மற்றும் கட் டறுத்தலுக்கான உணர்வுதான் மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சியின் போது மும்பை யின் இளம்பெண்கள் வெளிப்படுத்தியுள் ளார்கள் என்று ஏன் பார்க்கக் கூடாது! இந்தக் கோணத்தில் பார்க்கும் போது தான் அறிஞர் அ.மா. முன் வைத்துப் போராடும் விளிம்பு நிலை மக்களின் மாற்றுக் கலாச்சாரத்தினுடைய அறி வார்த்தமும், செயல்பாடும் துலாம்பர மாக விளங்கும்.

அறிஞர் அ.மா.வின் கருத்துப்படி

• ''மரபைக் கவிழ்த்தல், எல்லாவற்றை யும் தலைகீழாக்குதல், விதிக்கப்பட்ட அத்துக்களை மீறுதல்; கலகம் செய்தல்'' ஆகியவைதான் விளிம்புநிலையினரது பண்பாடு.

• ''பாலியல் ஒடுக்குமுறைக்கு எதிராக பெண்கள் / குழந்தைகள் தங்கள் விடுப டல்களை வெளிப்படுத்துதல்'' என்பது மக்கள் திரளின் மாற்றுக் கருத்துக்கள், எதிர்ப்புக் கூறுகள் நிலவுவதையே காட்டு கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

• மக்களின் இயல்பான பழக்க வழக்கங்களைக் குற்றங்களாக வரையறுத்து, குற்ற உணர்ச்சியை உருவாக்கி மக்களைக் கண்காணிக்கும் உரிமையை அரசு எடுத்துக் கொள்கிறது. உடல் கூச்சத்திற்குரிய பொருளாக உணர வைக்கப்பட்டு அதன் மீதான கண்காணிப்பைப் பெற்றோர், ஆசிரியர், மருத்துவர், அரசு மூலமாக ''ஒழுங்கின்மை பற்றிய அச்சம்'' வலிமையாக்கப்படுகிறது.

• குறியீடுகள், புனைவுகள், பிம்பங்கள் மர்மப்படுத்தல்கள் முதலியவை கட்டமைக்கப்பட்டு மக்கள் மீது திணிக்கப்படுகிறது. ஆகவே ஆளுங் கருத்தியல் முன் வைக்கும் அனைத்தையும் மறுப்பது அவசியமாகிறது. அதன் மேலாண்மையில் ஒரு சிதைவு ஏற்படுத்துவது, மாற்றுக் கலாச்சாரத்தின் முக்கியப் பணியாக இருக்கிறது. பிம்பங்களையும் குறியீடுகளையும் சிதைத்தல் முதன்மைத் தேவை. பெரியாரிடம் இதற்கு எடுத்துக் காட்டுகள்: தேசப் படத்தை எரித்தல், கடவுள் உருவங்களை செருப்பால் அடித்தல். இன்னொரு உதாரணம்: எம்.டி.வியில் மடோனா சிலுவையைப் போகப் பொருளாகப் பயன்படுத்துதல்.

• ஆசிரியன், கடவுள், வரலாறு, பகுத்தறிவு போன்ற எல்லாத்தளங்களும் முக்கியமிழந்து போகின்றன. பொருட்களின் சாரம், மொத்தத்துவம், பொதுமைப்படுத்துதல், தரப்படுத்துதல் ஆகிய் கருத்தாக்கங்கள் தனித்துவமான அடையாளங்களை அழித்தொழிக்கும் வன்முறைகள். தர்க்க வகைப்பட்ட அறிதலை வன்முறைக்கு ஒதுக்கிவிட்டு அதர்க்கவகைப்பட்ட அறிதலுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் அழகியல் அணுகல் முறையைத் தனக்குரியதாக வரித்துக் கொண்டு; பகுத்தறிவுக்கு மாற்றாக விளங்கக் கூடிய விருப்பு (Desire), உடல் (Body) பைத்திய நிலை, பன்மைத் தன்மை, நுண் அரசியல் ஆகியவற்றை முன் வைத்து உடல் அரசியல், விருப்பின் அரசியல் போன்ற கருத்தாக்கங்களை உருவாக்கியதுதான் பின் நவீனத்துவம்.

மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சிக்குத் திரண்ட இளைஞர்கள், இளைஞிகள் வெளிப்படுத்திய உணர்வுகளை மேற்கண்ட பின் நவீனத்துவ தத்துவ விளக்கங்களின் அடிப்படையில் பரிசீலிக்கத் தவறும் மரபு வழி மார்க்சியர்கள் கூட பார்ப்பன சனாதனிகளின் ஒழுக்கம் பற்றிய கண்ணோட்டத்தையே பிரதிபலிக்கின்றனர். மைக்கேல் ஜாக்சனின் நிகழ்ச்சிக்கு ஏகாதிபத்திய கலாச்சாரம் என்ற முத்திரை குத்தி, அங்கு நடந்தவை ஆபாச, களிவெறியாட்ட கேலிக் கூத்து என்றும் கருதி எதிர்க்கின்றனர்.

> கற்பையும், பிறன்மனை நோக்காமையை போதிக்கும் நிலவுடைமை ஆதிக்க வாதிகள் தாம் களவொழுக்கம், தேவதாசி முறைகளையும் உருவாக்கி வைத்துள்ளார்கள். அவர்களுக்கு கண்ணகியும் வேண்டும். மாதவிகளும் வேண்டும்.

ஆனால் 'அறிவு' தர்க்கத்தின் வழி நின்று நோய், பைத்தியம், குற்றம், பாலியல் முதலியவற்றை வரையறுக்கக் கூடாது; அந்த அடிப்படையில் மருத்துவமனை, மனநோய் விடுதி, சிறைச்சாலைகள், திருமணம் / குடும்பம் போன்ற பாலியலை ஒழுங்குப்படுத்தும் நிறுவனங்களை கட்டி அமைத்திருப்பதும் தவறு - இது மக்கள் மீது அதிகாரத்தையும் வன்முறையையும் அவிழ்த்துவிடுவதாகும். மனிதர்களை மனநோயாளி / தெளிந்த அறிவுடையவன் என்று வேறுபடுத்திப் பிரித்து, கண்காணித்து அடைத்து வைத்து அதிகாரத்துக் குள்ளாக்கப்படுகின்றனர்; சமூகம் முழுவதுமே சிறைச்சாலை வடிவிலான கண்காணிப்பு நிறுவனங்களாக மாற்றப்பட்டுள்ளது; பாலியலுக்கும் அதிகாரத்திற்குமுள்ள உறவை விரிவாக ஆராயும்போது சமூக முழுமையையும் மனநோய்ப்பட்ட பெண், சுய இன்பம் காணும் பிள்ளைகள், வக்கிரம் பிடித்த வாலிபன், மால்தூசிய கணவன் - மனைவி எனப் பிரித்து கண்காணிப்பிற்குள்ளாக்கப்படுவதைப் புரிந்து கொள்ள முடியும். ஆகவே மனநோயாளிகள், கைதிகள், நோயாளிகள் மீது பகுத்தறிவுக் கண்ணோட்டத்தைச் செலுத்தக் கூடாது அதற்கு மாற்றாக விளங்கும் மனப்பிறழ்வு, உடல், ஆசை ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்த வேண்டும்' — என்கிறார் அறிஞர் அந்தோனி சாமி மார்க்சு அவர்களின் ஞானத்தந்தை ஃபூக்கோ.



இந்தக் கோணத்தில் இருந்து பார்க்கும் போது மைக்கேல் ஜாக்சனின் நிகழ்ச்சிக்குத் திரண்ட மும்பை பெருநகர, இளைஞர்களும் இளைஞிகளும் வெளிப்படுத்திய உணர்ச்சிகளை அதிகாரத்திலுள்ள ஒழுக்கம், கட்டுப்பாடு, பாலாதிக்கம், பாலியல் ஒடுக்குமுறைகள் அடங்கிய கண்காணிப்புச் சிறைகளைத் தகர்க்கும் புரட்சிகர கலகத்தன்மையுடையதாகவே கருதவேண்டும்.

மைக்கேல் ஜாக்சனே சுற்றுச் சூழல் பற்றிய பாடல்களைப் பாடும் முற்போக்குத் தன்மையுடையவர்தானே என்று புரட்சிக் கவிஞர் இன்குலாப் வரவேற்றுள்ளார். அதுமட்டுமல்ல போர்வெறி, சீனத்தில் ஜனநாயகத்துக்காக போராடும் மாணவர்கள் மீதான ஒடுக்குமுறை, நீக்ரோக்களுக்கெதிரான வெள்ளை நிறவெறி, குழந்தைகளின் புறக்கணிப்பு எல்லாவற்றையும் தான் பாடுகிறார். சமூக சேவைக்கு இலவசமாகவே இசை நிகழ்ச்சி நடத்துகிறார். (''ஊர்வசி... ஊர்வசி... டேக் இட் ஈசி ஊர்வசி'' பாடலில் கூட ''புரட்சிகள் ஏதுமில்லாமல் பெண்ணுக்கு விடுதலை கிடையாது'' என்ற வரிகள் வருகின்றன. புரட்சிக் கவிஞர் இன்குலாப் இதுபற்றி என்ன சொல்கிறாரோ தெரியவில்லை. தன்னார்வக் குழுக்களின் பணத்தைப் பயன்படுத்திக் கொள்வதை போல இன்னொரு புரட்சிக் கவிஞர் வாலியை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?)

மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சி அதன் எதிர்வினைகள் பற்றி அறிஞர் அந்தோணிசாமி மார்க்சும் அவரது சீடர்களும் என்ன சொல்வார்களோ தெரியாது. ஆனால் அவர்கள் நிச்சயம் இது இந்தியப் பார்ப்பன சனாதன ஒழுக்கம், பாலியல் விழுமியங்களின் மீது பெருமளவு உடைப்பு ஏற்படுத்தும் போக்குதான் என்று வரவேற்க வேண்டும். ஏனெனில் ஏற்கனவே அவர்கள் மேலை நாடுகளில் உள்ள ''ஆட்டோநாம்கள்'' எனப்படும் ஓரினச் சேர்க்கையாளர்கள் போதைப் பண்பாளர்கள், உல்லாசகளிவெறிக் கூட்டத்தினரையே புரட்சிகர முன்னோடிகள் என்று இனங்கண்டுள்ளனர்.

> மடோனாவும், மைக்கேல் ஜாக்சனும் ஏகாதிபத்தியப் பண்பாட்டின் சின்னங்கள். அவர்களுடைய ஆபாச வக்கிரங்களும், அறிஞர் அந்தோணி சாமி மார்க்சு சித்தரிக்கும் மாற்றுக் கலாச்சாரமும் வேறு வேறல்ல. அவர் எதையெல்லாம் எதிர்க் கலாச்சாரம், கலகப் பண்புகள் என்று குறிப்பிடுகிறாரோ அவையெல்லாம் அதிகார பூர்வமாக விற்பனை செய்வதற்கு ஏற்கனவே கடை விரிக்கப்படுபவைதாம்.



படிப்பகம்

www.padippakam.com

## பின் குறிப்பு:

இந்தக் கட்டுரையின் மறுவாசிப்பு பழக்கத்தின் காரணமாகவோ, தற்செயலாகவோ பகுத்தறிவு மற்றும் தர்க்க ரீதியில் நிகழ்ந்து விட்டது. எனவே பின்வரும் சாரம்சமான, பொதுமையான, மொத்தத்துவமான முடிவுக்கு வரநேர்ந்துவிட்டது.

அறிஞர் அந்தோணிசாமி மார்க்கும் அவரது மேலை நாட்டு ஞானத் தந்தையரும், கீழை நாட்டு சீடர்களும் வாதிடுவதைப் போல மாற்றுக் கலாச்சாரம், எதிர்க் கலாச்சாரம் விளிம்பு நிலை மக்கள் கலாச்சாரம் என்பதெல்லாம் தற்போதுள்ள அடக்கி ஒடுக்கிச் சுரண்டும் சமுதாய ஆளுமைச் சக்திகளின் கலாச்சாரக் கட்டமைவின் இன்னொரு பக்கம் - ஒரே நாணயத்தின் மறுபக்கம் - தானே தவிர வேறல்ல. ஒழுக்கம், மானம், கட்டுப்பாடு, தூய்மை, தரம், நீதி, நேர்மை, மரபு, கற்பு, குடும்பம், திருமணம் மற்றும் பிற பாலியல் நெறிமுறைகள், அறவியல் கோட்பாடுகள் ஆகிய இந்தச் சமுதாயப் பண்பாட்டு நியதிகள் முற்றும் முழுதான ஆளுமை செலுத்துபவை அல்ல. இவையெல்லாம் வெவ்வேறு வர்க்கங்கள், பாலினப் பிரிவுகள், சாதிகள், சமூகத் தட்டுகளின் சார்போடும் வெவ்வேறு பண்புகளோடும் அளவுகளோடும் தான் இயங்குகின்றன. அதாவது மார்க்சிம் கார்க்கி சொன்னதைப் போல முதலாளி பேசும் ஒழுக்கம், கற்பு தன் மனைவியைப் பொறுத்துத் தான், அதேசமயம் அவன் தொழிலாளரின் மனைவியரை பெண்டாளவே விழைகிறான். முதலாளி தன் செல்வத்தைக் காத்துக் கொள்ளவே களவாமை பற்றிப் பேசுகிறான். ஆனால் தொழிலாளியின் சேமநிதியைக் கொள்ளையிடுகிறான். கற்பையும், பிறன்மனை நோக்காமையையும் போதிக்கும் நிலவுடைமை ஆதிக்க வாதிகள் தாம் களவொழுக்கம், தேவதாசி முறைகளையும் உருவாக்கி வைத்துள்ளார்கள். அவர்களுக்கு கண்ணகியும் வேண்டும், மாதவிகளும் வேண்டும். இந்த வகையில் ஆதிக்க சக்திகளின் நியதிகள் எல்லாம் போலியானவை / எதிரெதிரான இரட்டைப் பண்புகளுடையவை. ஆகவே அறிஞர் அந்தோணிசாமி மார்க்சு வாதிடுவதைப் போல எதிர்ப் பண்புகள் நியதிகள் மற்றும் கலகக் கூறுகள் அவற்றுக்குள்ளாகவே, அவர்களாலேயே பின்பற்றுபவை தான்.

இன்னொருபுறம் அவர்கள் போதிக்கும் பண்பாட்டு நெறிமுறைகள், அறவொழுக்கங்கள், நீதி, சட்டம் - ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கெதிராக விபச்சாரம், கிரிமினல் குற்றக் கும்பல்கள், ஓரின - உல்லாச கேளிக்கை, சூதாட்டங்கள் போன்றவை இந்தச் சமுதாய அமைப்பின் துணைவிளைவுகளும் அதன் பகுதிகளும் தான். அதாவது அறிஞர் அந்தோணிசாமி மார்க்சு முன் வைக்கும் எதிர்க் கலாச்சாரம், மாற்றுக் கலாச்சார நடவடிக்கைகளையே தொழிலாகவும் பண்பாகவும் கொண்ட ஆதிக்க சக்திகளையும் ஒரு பிரிவாக உள்ளடக்கியதுதான் இந்த சமுதாய அமைப்பு. இவற்றில் பலவற்றை கிரமப்படியே நடத்துவதிலும் விரிவுபடுத்துவதிலும் இப்போது பல அரசுகள் திட்டமிடுகின்றன. விபச்சாரத் தொழில் புரிபவரை (செக்ஸ் ஒர்க்கர்) பாலுறவுத் தொழிலாளர் என புது நாமகரணம் சூட்டி, பாலியல் சுற்றுலாக்கள் சட்டப்படியே நடத்தப்படுகின்றன; புதுப்புது (காசினோக்கள்) சூதாட்ட விடுதிகள் நிறுவப்படுகின்றன. ஓரினத் திருமணம், போதை பழக்கம் சட்டபூர்வமாக்கப்படுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் மடோனாவும் மைக்கேல் ஜாக்சனும் ஏகாதிபத்தியப் பண்பாட்டின் சின்னங்கள், பிரதிநிதிகள்தாம். அவர்களுடைய ஆபாச வக்கிரங்களும், அறிஞர் அந்தோணிசாமி மார்க்சு சித்தரிக்கும் மாற்றுக் கலாச்சாரம், எதிர்க் கலாச்சாரம், கலகக் கலாச்சாரமும் வேறு வேறல்ல. அவர் எதையெல்லாம் எதிர்க் கலாச்சாரம், மாற்றுக் கலாச்சாரம், கலகப் பண்புகள் என்று குறிப்பிடுகிறாரோ அவையெல்லாம் அதிகாரபூர்வ மக்கள் தொடர்பு சாதனங்கள் விற்பனை செய்யும் பண்பாட்டுச் சேவைப் பொருட்களாக ஏற்கனவே கடைவிரிக்கப்படுபவைதாம்! அவர் இப்போது தூக்கிப் பிடிக்கும் பின்நவீனத்துவம் கூட அதிகாரத்திற்கு எதிரான புரட்சித்தத்துவம் அல்ல; தேசிய அரசுகளை வீழ்த்தவும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைக்கவும் ஏகாதிபத்திய அரசுகள் கையிலெடுத்துள்ள தத்துவம்தான். அதை இன்னொரு சந்தர்பத்தில் பார்ப்போம்.

• சாத்தன்

## காவிக் கொடியில் அமெரிக்க நட்சத்திரம்

பால் தாக்கரேயிடம் கேட்டுத்தான் பம்பாய் சிறுநீர் கழிக்கும். சிவசேனா இன்றி காவிப்படையின் வாள் வீசாது. மருதி இடிப்பா, மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சியா இரண்டிலும் காவிக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

உலச் சந்தையில் இழந்து விட்ட பெயரை தூக்கி நிறுத்த இசைப் பயணம் செய்து வரும் மைக்கேல் ஜாக்சனை இந்தியாவிற்கு கொண்டு வந்தவர்கள் வைஸ்காஸ் நிறுவனத்தினர். இசை நிகழ்ச்சிக்கு 6 கோடி கடன் கொடுத்து அருள் புரிந்தார், பம்பாயின் வைர வியாபாரி பாரத் ஷா.

வேலையில்லாத 27 லட்சம் இளைஞர்களுக்கு வேலை கொடுப்பதாக சிவசேனா தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது. அதற்கு 4 கோடி ரூபாய் நன்கொடையை மைக்கேல் ஜாக்சன் நிகழ்ச்சியின் மூலம் கொடுப்பதற்கு வைஸ்காஸ் தாக்கரேயை அணுகியது. பேரம் முடிந்தது. நிகழ்ச்சிக்கு சிவசேனா - பா.ஜ. அரசு 12 கோடி ரூபாய் வரிவிலக்கு அளித்தது.

கையோடு தாக்கரேயின் மருமகன் ராஜ் தாக்கரேயை தலைவராகப் போட்டு 'சிவா. உத்யோக் சேனா' என்ற டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டது. டிரஸ்ட்டின் நீண்ட



கால இலட்சியம் இளைஞர்களுக்கு வேலை கொடுப்பது; உடனடி நோக்கம் 4 கோடி நன்கொடை பெறுவது.

பிறகு, காவித் தோரணங்கள் வரவேற்க, காவி வண்ண உடுப்பில் சாந்தா குருஸ் விமான நிலையத்தில் இறங்கினார் மைக்கேல் ஜாக்சன். உடனே தாக்கரே வீட்டிற்கு சென்றார். குடும்பத்தினருடன் அளவளாவினார். வெள்ளி வீணையை பரிசளித்தார் பால் தாக்கரே.

மாலையில் அந்தேரி வளாகத்தில் நிகழ்ச்சி. இங்கும் காவிக் கொடிகள், தோரணங்கள், 15,000 ரூபாய் அனுமதிச் சீட்டு பிரிவில் தாக்கரேயின் குடும்பம், சிவசேனாவின் பிரமுகர்கள், பம்பாயின் நடிகர்கள் அணிவகுத்தனர். நிகழ்ச்சியை முழுவதும் நின்று கொண்டே ரசித்தார் தாக்கரே.

ஓட்டுக்கு இந்து வெறி பண்பாடு, சில்லறைக்கு அமெரிக்க சரணாகதி என்பது என்ரான் ஒப்பந்தத்திலேயே சந்தி சிரித்த விசயம். புண்ணிய பாரதத்தின் கொள்கை மறவர்களாகிய சங்க பரிவாரங்களுக்கு ஓர் யோசனை.

காசி, மதுரா, அயோத்தி போன்று தாக்கரே வீட்டில் மைக்கேல் ஜாக்சன் சிறுநீர் கழித்த கழிப்பறையை கோவிலாக்கலாம். அதை புகைப்படமெடுத்து, செங்கல், செருப்பு போன்று பாரதமெங்கும் அனுப்பி வைக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com

# மத வெறியர்களின் கலைப் பித்தர்களின்

# முற்றுரிமைக் கோரிக்கை

சில ஆண்டுகளுக்கு முன் பம்பாய் சென்றிருந்தபோது அங்கே பிழைக்க வந்திருந்த திருநெல்வேலிக்கார இளைஞர் ஒருவரைச் சந்தித்தேன். ''மொழி தெரியாத ஊருக்கு இவ்வளவு துணிச்சலாக ரயிலேறி வந்திருக்கிறீர்களே'' என்று நான் ஆச்சரியமாய் கேட்டேன். அவரோ வெகு அலட்சியமாய் பதில் சொன்னான்.

''இந்த ஊர்ல பொழக்கத் தெரியலன்னா வேற எந்த ஊர்ல சார் பொழக்கிறது? ஒண்ணும் வேணாம். இந்த கூழாங்கல்லு இருக்கு பாருங்க, அத பொறுக்கிட்டு வந்து பெயிண்ட் அடிச்சி வெள்ளையா வெளேர்னு ஒரு துணியில நாலு நாலா கூறு கட்டி வச்சிகிட்டு சௌபாத்தி பீச்ல உக்காந்து 'கலைப் பொருள்'னு சொன்னா 100, 200 -ன்னு கொடுத்து வாங்கிட்டுப் போவானுங்க சார்'' என்றார்.

அத்தகைய நுட்பமான கலாரசிகர்கள் வாழும் பம்பாயைச் சேர்ந்த பிரபலமான ஓவியர் உசேன். சினிமாவைத் தவிர வேறு கலை கிலையெல்லாம் அறியாத பாமரர்களுக்குப் புரியும்படி சொல்கிறேன். மாதுரி தீட்சித் என்ற இந்தி நடிகையின் அழகில் மயங்கி அந்தப் பெண்மணியை ரொம்பவும் 'ருசிகரமான' ஓவியங்களாக வரைந்து தள்ளினாரே அந்த உசேன்தான் இந்த உசேன்.

அவருடைய ஓவியங்களை நேரில் தரிசிக்க விரும்பினால் டாடா, பிர்லா, இந்துஜா போன்ற கோடீசுவரர்களின் வீட்டுக்கோ அல்லது குறைந்தபட்சம் தாஜ், ஷெரட்டான் போன்ற நட்சத்திர ஓட்டல்களுக்கோ போகும் தகுதி உங்களுக்கு இருக்க வேண்டும். உயர்ந்த கலைப் பொருட்கள் உயர்ந்த இடங்களைத் தேடிச் செல்வது இயற்கைதானே! கோஹினூர் வைரத்தை பிளாட்பாரத்தில் போட்டா கண்காட்சி நடத்த முடியும்?

சரி. விசயத்துக்கு வருவோம். அப்பேர்ப்பட்ட உசேன் 20 வருசத்துக்கு முன்னால் சரசுவதியைப் படமாக வரைந்தார். பழைய சிவாஜி படத்தில் கொடுமைக்கார மாமியாராக வந்து வெறுப்பேத்தும் சி.கே. சரசுவதி என்று நினைத்து விட வேண்டாம். ஒரிஜினல் சரசுவதி! சரசுவதி சபதத்தில் பார்த்திருப்பீர்களே அதே சரசுவதி; முதுகில் எக்ஸ்ட்ராவாக இரண்டு கை வளர்ந்திருக்கும் அதே சரசுவதிதான்.

கல்விக் கடவுளாகிய அந்த சரசுவதியை உசேன் அம்மணமாக வரைந்து விட்டார். அவளுடைய அழகில் மயங்கிய இந்துஜா, சொன்ன விலையைக் கொடுத்து வாங்கி 20 ஆண்டுகளாக தன்னுடைய கஸ்டடியில் வைத்திருந்தார். இந்த விஷயம் கட்டின புருசனாகிய பிரம்மனுக்கே தெரியாது.

அவமானப்பட்டுக் கிடக்கும் இந்துக் கடவுள்களின் உரிமைக்குரல் கொடுக்க யார் இருக்கிறார்கள் இந்த நாட்டில் - ஆர்.எஸ்.எஸ். காரர்களைத் தவிர?

பிரம்மனுக்கே தெரியாத இந்த பிரம்ம ரகசியத்தையும் அவர்கள்தான் கண்டு பிடித்தார்கள். விசயம் தெரிந்தவுடனே கோபம் கொண்ட சிவசேனை சர்க்கார் உசேன் மீது கேஸ் போட்டுவிட்டது. அகமதாபாத்தில் ஒரு மாளிகை போன்ற அரங்கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உசேன் ஓவியங்களையெல்லாம் கொளுத்திவிட்டது வானரப் படை (பஜ்ரங் தள்). எரிந்து சாம்பலானவர்களில் அனுமாரும் உண்டு. அனுமார்தான் ஊரைக் (இலங்கையை) கொளுத்தியதாக கேள்விப் பட்டிருக்கிறோம். இவர்கள் அனுமாரையே கொளுத்திய வானரப் படை!

கலைஞர் பெருமக்களும் இதை விடுவதாக இல்லை. ''இது நியாயமா, ஒரு ஜனநாயக நாட்டில் கலைஞனுக்கு இந்த உரிமை கூடக் கிடையாதா'' என்று குமுறி எழுந்து விட்டார்கள். குமுறி எழுந்தார்கள் என்று சொன்னதால் ஏதோ பெரிய அடிதடி கலாட்டா என்று பயந்து விடவேண்டாம்.

அந்த மாதிரியெல்லாம் அவர்கள் கலாட்டா செய்ய மாட்டார்கள். ஒரு 20, 30 பேர் காரில் வந்து இறங்கி, கையில் ரெண்டு அட்டையைப் பிடித்துக் கொண்டு எழவு வீட்டில் நிற்பார்களே, அப்படி சோகமாக நிற்பார்கள். பத்திரிகை; டி.விக்களெல்லாம் அலறியடிச்சுகிட்டு வந்து படமெடுத்த உடனே எல்லாம் கலைந்து போய் விடுவார்கள். அவ்வளவுதான்.


இன்று பத்திரிகைகளிலெல்லாம் இதுதான் செய்தி. சரசுவதியை இப்படி வரையலாமா? கூடாதா? என்று விவாதம். 'எப்படி'ன்னு ஒரு வாசகன் கேட்டான். ''இதோ இப்படித்தான்''னு அந்த அம்மணப் படத்தை எல்லோரும் வெளியிட்டு விட்டார்கள்.

பி.ஜே.பி.காரர்கள் எதைத் தொட்டாலும் வில்லங்கமாகவே முடிகிறது. வெயில், மழைக்குத் தப்பி மசூதிக்குள் இருந்த ராமனை இழுத்து நான்கு வருடமாய் நடுத்தெருவில் நிற்க வைத்தார்கள். இப்போது சரசுவதி. இனி ''வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்'' என்று பக்தன் கண்ணை மூடினால் பக்தனின் மனக்கண்ணில் சரஸ்வதி அம்மணமாகத் தெரியப் போகிறாள். மற்றவர்களை விட்டுத் தள்ளுங்கள். பிரம்மனின் நிலைமையை நினைத்தாவது இவர்கள் கொஞ்சம் யோசித்திருக்கலாம்.

இருந்தாலும் உரிமை பற்றிய பிரச்சினை என்று வரும்போது இப்படி சில இழப்புகளைச் சந்தித்துத்தான் தீரவேண்டியிருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் பி.ஜே.பி. தரப்பு வக்கீலாக கோதாவில் இறங்கியிருக்கிறார் அருண்ஷோரி. ''இந்துக்கள் என்ன நினைப்பார்கள் என்று கொஞ்சம் கூட யோசிக்காமல் உங்கள் இஷ்டத்துக்குக் கற்பனையைத் தட்டி விடுகிறீர்கள்; டெல்லியில் என்னடாவென்றால் ராதையையும் கிருஷ்ணனையும் அம்மணமாக வரைந்து கண்காட்சி வைக்கிறான் இன்னொரு ஓவியன்; ஒரு பத்திரிகைக்காரன் அதையே அட்டைப் படமாக போடுகிறான். நாங்கள் என்ன இளிச்சவாயர்களா?'' என்று வெடித்தார்.

இந்தப் பாயிண்டை சிக்கென்று பிடித்துக் கொண்டார்கள் சில கலைஞர்கள். ''ஆதி சங்கரர் தேவியின் மார்பை வர்ணிக்க வில்லையா? சரசுவதியின் அருளால் கவிபாடும் திறனைப் பெற்ற காளிதாசன் சரசுவதியின் மறைவுறுப்புகளையே வர்ணிக்கவில்லையா? அந்தக்



இந்திரா காந்தியை துர்க்கையாக, மாதுரி தீட்சித்தை அழகியல் சின்னமாக, வெண்தாமரை சரகவதியை கலையின் தவமாக - வரைந்து தள்ளும் ஓவியர் உசேன்.



படிப்பகம்

www.padippakam.com

கோயிலில் சரசுவதி அம்மணமாக இல்லையா? இந்தக் கோயிலில் அரை அம்மணமாக இல்லையா? என்று ஆதாரங்களை அடுக்கத் தொடங்கினார்கள்.

சரி. இவர்களை வேறு ரூட்டில்தான் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்த ஷோரி, "கலைஞர்களின் உரிமையை நான் மதிக்கிறேன்; இருந்தாலும் ஒரு சந்தேகம். உங்கள் கற்பனைக் குதிரையை இசுலாம் பக்கமும் கொஞ்சம் திருப்புங்களேன். முகமது நபியைப் படம் வரையக் கூடாதா, அல்லாவை வரையக் கூடாதா?" என்று மடக்கினார்.

அதெப்படி அவர்களுக்குத்தான் உருவ வழிபாடு கிடையாதே" என்றார்கள் ஓவியர்கள்.

"அதைப் பற்றி உனக்கென்ன கவலை? யாரையாவது படம் போடு. கவுண்டமணி மாதிரி ஒரு ஆளை வரைஞ்சி கீழே அல்லான்னு எழுதி வை. தகறார் வரட்டும்."

இதைக் கேட்டவுடனே வேறு கோஷ்டியினர் களத்துக்கு வந்துவிட்டார்கள்.

"இறைவனை உருவமாகத் தீட்டுகிறவன் முஸ்லீமே இல்லை. எனவே உசேன் முஸ்லீம் கிடையாது. நீங்கள் உசேனின் படத்தைக் கொளுத்தினாலும் சரி, உசேனையே கொளுத்தினாலும் சரி எங்களுக்கும் கவலை இல்லை. அநாவசியமாக எங்கள் விவகாரத்தில் யாரும் தலையிட வேண்டாம். இந்த கருத்து சுதந்திரம் கிருத்து சுதந்திரமெல்லாம் இசுலாத்தில் கிடையாது. இறைவனுக்கு கட்டுப்படுவதுதான் எங்களுடைய சுதந்திரம்" என்று பட்டு கத்தரித்தாற்போல சொல்லிவிட்டார்கள் இசுலாமிய மதவாதிகள்.

**"இந்து வெறியர்களிடமிருந்து இசுலாமியர்களைக் காப்பாற்ற நாத்திகர்களுடன் சேர வேண்டியிருக்கிறது. நாத்திகர்களிடமிருந்து இசுலாத்தைக் காப்பாற்ற இந்து வெறியர்களுடன் சேர வேண்டியிருக்கிறது. இசுலாமியர்களை பாதுகாப்பதா, இசுலாத்தைப் பாதுகாப்பதா?"**

விவகாரம் இவ்வளவு சீக்கிரம் முடிவுக்கு வந்ததில் ஷோரிக்கு அளவிலா ஆனந்தம். "பாய்.. உங்களுக்கும் நமக்கும் ஆயிரம் பிரச்சினை இருக்கலாம். ஆனா நமக்குள்ள அடிச்சிகிட்டு நாஸ்திகன் கிட்ட பஞ்சாயத்துக்குப் போனா என்ன ஆகும்? ரெண்டு பேரும் கம்பெனிய 'மூடறமாதிரி ஆயிடும்" என்றார் ஷோரி.

நீண்டகால நோக்கில் பார்த்தால் இது நியாயமாகத்தான் பட்டது. இருந்தாலும் இந்த நாயிடம் உபதேசம் கேட்கும் நிலைமை ஆகிவிட்டதே என்று நினைக்கும்போது அவமானமாகவும் இருந்தது.

இந்து வெறியர்களிடமிருந்து இசுலாமியர்களைக் காப்பாற்ற நாத்திகர்களுடன்சேர வேண்டியிருக்கிறது. நாத்திகர்களிடமிருந்து இசுலாத்தைக் காப்பாற்ற ஷோரியுடன் சேர வேண்டியிருக்கிறது. இசுலாமியர்களை பாதுகாப்பதா இசுலாத்தைப் பாதுகாப்பதா என்ற குழப்பத்துடன் உசேனை வைதபடியே அவர்கள் அங்கிருந்து நகர்ந்தனர்.

பிறகு வெற்றிப் பெருமிதத்துடன் உசேன் ஆதரவாளர்கள் பக்கம் திரும்பினார் ஷோரி. முஸ்லீம்களே உசேனைக் கை கழுவிவிட்டார்கள். உங்களில் பலர் இந்துக்களாக இருந்தும் ஏன் இப்படி துரோகிகளாக இருக்கிறீர்கள் என்று அன்புடன் கடிந்து கொண்டார்.

மதத்தைக் காட்டி எங்களைப் பிரிக்க முயல வேண்டாம். நாங்கள் மதத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று முழங்கினார்கள் கலைஞர்கள். அப்படியானால் நீங்கள் கம்யூனிஸ்டுகளா அல்லது பெரியார் ஆட்களா? என்று மடக்கினார் ஷோரி.

கடகடவென்று சிரித்தார்கள் கலைஞர்கள். கம்யூனிஸ்டுகளின் கலைக் கொள்கையை நாங்கள் எந்தக் காலத்திலும் ஒத்துக் கொண்டதில்லை. பெரியாரைப் போல நாங்கள் மதத்துவேஷிகளும் அல்ல. நாங்கள் எல்லா மதங்களையும் சமமாக மதிக்கிறோம். சகிப்புத் தன்மை தானே 5000 ஆண்டு இந்தியப் பாரம்பரியம்!

"ஒரு சின்ன திருத்தம்" என்றார் ஷோரி. "அது இந்தியப் பாரம்பரியம் அல்ல. இந்துப் பாரம்பரியம். சகிப்புத் தன்மை என்பது இந்துவின் குணம். நான் தொடர்ந்து இந்து குணம் கொண்டவனாக நீடிக்க வேண்டுமென்றால், முஸ்லீம் குணம் கொண்டவனாக மாறாமல் இருக்க வேண்டுமென்றால், எனக்கு ஒரு அல்லா படம் வரைந்து கொடுங்கள்" என்று தூரிகையை நீட்டினார் ஷோரி.

நீங்கள் சொன்னவுடன் கையில் பிரஷ்ஷை எடுப்பதற்கு நாங்கள் என்ன சுண்ணாம்பு அடிப்பவர்களா? நாங்கள் கலைஞர்கள். படைப்பு என்பது ஒரு தவம். படைப்பின் அந்த ஒரு க்ஷணத்தைத் தவிர, மேன்மையான அந்த க்ஷணத்தின் உணர்ச்சியைத் தவிர வேறு எதற்கும் நாங்கள் உண்மையாக இருக்க முடியாது என்று சீறினார்கள் கலைஞர்கள்.

**"உசேனுடைய ஓவியங்களைநேரில் தரிசிக்க விரும்பினால் டாடா, பிர்லா, இந்துஜா போன்ற கோடீசுவரர்களின் வீட்டுக்கோ, அல்லது தாஜ், ஷெரட்டன் போன்ற நட்சத்திர ஓட்டல்களுக்கோ போகும் தகுதி உங்களுக்கு இருக்க வேண்டும்"**

"அப்படியானால் உசேனின் ஓவியங்களை கொளுத்திய இளைஞர்கள் அந்த க்ஷணத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிக்கு உண்மையாக இருந்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன்" என்றார் ஷோரி.

"நாங்கள் படைத்தலைப் பற்றிப் பேசுகிறோம். நீங்களோ அழித்தலைப் பற்றிப் பேசுகிறீர்கள்" என்று குமுறினார்கள் கலைஞர்கள்.

"அழித்தல் இல்லாமல் படைத்தல் உண்டா? உதாரணமாக மசூதியை இடிக்காமல் கோயில் கட்ட முடியுமா?" மடக்கினார் ஷோரி.

இந்தாளிடம் பேசிப் பயனில்லை என்று நடையைக் கட்டினார்கள் கலைஞர்கள் - காத்தல் கடவுளான கவர்மெண்டிடம் முறையிடுவதற்கு.

• • •

உசேன் பிறப்பால் ஒரு இசுலாமியர் என்பதைக் கொண்டு மதவெறி தூண்டப்படும் ஒரு காரணத்திற்காக மட்டுமே நாம் இதை எதிர்க்கிறோம். கலைஞனின் உரிமை, ஜனநாயக உரிமை என்ற அடிப்படையில் உசேனுக்காகப் பொங்கி எழும் லட்சரூபாய் ஓவியர்களுடனும், அவர்களுடைய கலைக் கோட்பாட்டுடனும் நமக்கு எவ்வித உடன்பாடும் கிடையாது.

அதே சமயம் இசுலாமிய மதவாதிகள் இந்து மத வெறியர்களுடன் சேர்ந்து கொண்டு 'எந்த மதத் தலைவரையும், கடவுளையும் மரபுக்கு விரோதமாகச் சித்தரிக்க எந்தக் கலைஞனுக்கும் உரிமை கிடையாது, என்று உசேனை எதிர்க்கிறார்கள்.

காரணம் பகுத்தறிவுக்கும் விஞ்ஞானத்திற்கும், மதச்சார்பின்மைக்கும் எதிராக மூடநம்பிக்கையும், மதக் கடுங் கோட்பாட்டு வாதமும் தங்கள் உரிமையை நிறுவுகின்றன. மதச்சார்பற்ற நாடு என்று கூறிக் கொள்ளும் நாட்டில் மதச் சார்பற்றவர்களின் கருத்துரிமைக்குக் கல்லறை எழுப்பப்படுவது இப்படித்தான்.

• முருகேசன்

படிப்பகம்

www.padippakam.com

# அறிவியலின் நெற்றியடி புரட்டலின் சுவிசேசம்

**கி.**பி. 1860 ஆம் வருடம், ஜூன் மாதம். இங்கிலாந்து, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக வளாகம் மக்கள் வெள்ளத்தால் ததும்புகிறது. பற்பல நாடுகளிலிருந்து வருகை தந்திருக்கும் அறிஞர் பெருமக்கள், என்னதான் நடக்கும் என்று கிசுகிசுத்தவாறு அமர்ந்திருக்கும் பிரபு குலத்தவர்கள், நடைபெற இருந்த மாபெரும் விவாதப் போரைப் பற்றி ஆரவாரத்துடன் பேசிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டம் என ஆக்ஸ்போர்டு வளாகம் அதிர்ந்து கொண்டிருந்தது.

ஆக்ஸ்போர்டின் கலகலப்பிற்கு காரணம் உண்டு. 'இயற்கைத் தேர்வின் மூலம் உயிரினங்களின் தோற்றம்' என்ற புத்தகத்தை வெளியிட்டு அன்றைய இங்கிலாந்தில் ஒரு சூறாவளியைக் கிளப்பியவர் சார்லஸ் டார்வின். பரிணாமத் தத்துவத்தை 230 பக்கங்களில் விவரிக்கும் இச்சிறு நூல் ஏற்படுத்திய புயலில் விவிலியமும் பறந்து சென்றது.

இறைவனின் மறைவாக்கு கேள்விக்குள்ளாக்கப்படுவதை கிறித்தவ பாதிரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். பொது மேடையில் விவாவதத்திற்குத் தயாரா என்று டார்வினின் ஆதரவாளர்களுக்கு சவால் விட்டனர்.

மதத்தின் பிடியிலிருந்து அறிவியலை மீட்கும் கடமையுணர்வுடன் ஆக்ஸ்போர்டு விவாதத்திற்கு வருகை தந்தனர் டார்வினின் ஆதரவாளர்களான ஹக்ஸ்லியும், ஹூக்கரும். அறிவின் அடக்கத்துடன் அமர்ந்திருந்த இவ்வறிஞர்களின் எதிரில் ஆக்ஸ்போர்டு மதத்துறையின் பிரபலமான மதகுரு பிஷப் வில்பர் போர்ஸ் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து வீற்றிருந்தார். அவரைச் சுற்றி வெண் தூண்களாய் ஆண்டவனடியார்கள் மூளையைச் சாணை பிடித்துக் கொண்டு (!) அமர்ந்திருந்தனர். விவாதம் தொடங்கிற்று.

வேத நூலை முத்தமிட்டு, சிலுவை ஏந்திய கரங்களுடன் தொண்டையைக் கனைத்துவிட்டு பேச ஆரம்பித்தார் பிஷப். ''மக்களே! பரமபிதாவின் பெயரால் உங்களை வேண்டுகிறேன். சாத்தானின் அவதாரமான சார்லஸ் டார்வின், நீங்களெல்லாம் குரங்கிலிருந்து தோன்றியவர்கள் என கூசாமல் கூறியிருக்கிறான். பாலூட்டி சீராட்டி வளர்த்த உங்கள் பாட்டன்மார்களும், முப்பாட்டன்மார்களும் குரங்குகளா? இதை ஏற்கப் போகிறீர்களா? எனது கேள்விக்கு இங்கு அமர்ந்திருக்கும் குரங்கின் சீடர்கள் என்ன பதில் தருவார்கள். இவர்கள் குரங்கிலிருந்து உதித்ததாகச் சொல்வது தன் பாட்டன் வழியாகவா, பாட்டி வழியாகவா'' என்று கேலி செய்த திருப்தியுடன் இறுதியில் 'டார்வினின் ஆராய்ச்சி சத்தியமறையின் புனிதக் கொள்கைக்கு எதிராக இருப்பதாகக் கூறி இருக்கையில் அமர்ந்தார்.

'புனித'க் கொள்கையால் உணர்வூட்டப்பட்ட மக்களின் கரவொலியின் நடுவில் பேச வந்தார் டார்வினின் சீடர் ஹக்ஸ்லி.

வெறியூட்டப்பட்ட மத உணர்வுகளின் மத்தியில் உண்மையைப் பேசுவதற்கு ஒரு மனிதனுக்கு எத்தனை தைரியம் வேண்டும். மதமெனும் குகையிலிருந்த மக்களை விஞ்ஞான உண்மையெனும் ஒளியை நோக்கி ஈர்ப்பதற்கு அனைத்து அவலங்களையும் சகித்துக் கொண்டார் ஹக்ஸ்லி. டார்வினின் ஆராய்ச்சியை விரிவாகப் பேசினார். ஒரு பாதி மக்களையாவது உண்மையினை ஏற்க வைத்தார். பொது விவாதம் முடிந்தது.



சாகும் வரை ஆராய்ச்சியே வாழ்க்கையாய் சார்லஸ் டார்வின்



அறிவியலின் அற்புதத்தினால் உலகைச் சுற்றும் போப் ஜான் பால் II

ஆனால் டார்வின் எழுப்பிய புயல் ஓயவில்லை. குரங்குகளை கண்ட இடமெல்லாம் கல்லாலடித்து துரத்தினார்கள் மறை உணர்வு கொண்ட மக்கள்.

இங்கிலாந்தின் தேவாலயங்களில், கருப்பு உடை தரித்த பக்த கோடிகள், கால்களின் கீழ் டார்வினின் புத்தகத்தை மிதித்தவாறு இறைவனின் புனிதக் கொள்கையை சாத்தானாகிய டார்வினிடமிருந்து காப்பதாக உறுதி பூண்டார்கள்.

• • •

**கி.**பி. 1950. 'பொதுவுடைமைப் பூதம்' ஐரோப்பிய நாடுகளைப் பற்றிப் பரவும் காலம். கம்யூனிஸ்ட் சாத்தான்களிடமிருந்து புனிதக் கொள்கையை காப்பதற்கு போப் பயஸ் XII எச்சரிக்கிறார், ''பரிணாம வாதத்தை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இதைக் கொண்டு பொருள் முதல்வாதிகளும், நாத்திகர்களும் உலகை உருவாக்கிய தேவனின் பங்கை மறைக்கிறார்கள். எந்த உயிரின மூலப் பொருளில் இருந்து மனிதன் தோன்றினானோ, அதைப் படைத்தவன் தேவனே'' என்று அருள்மொழிந்து பரலோகம் சென்றார்.

• • •

**கி.**பி. 1996. வாடிகன் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு போப் ஜான் பால் II சொல்வதாவது, 'மனிதன் ஒற்றை அடியில் உருவாக்கப்பட்டவன் என்பதில்லை. தேவனால் படிப்படியாக பரிணாம வளர்ச்சியின் மூலம் உருவானவன் என்பதை ஏற்கலாம்' சென்ற நூற்றாண்டில் (டார்வினால்) வெளியிடப்பட்ட பரிணாம வளர்ச்சி பற்றிய தத்துவம், ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருக்கிறது. ஆனால் அனைத்திற்கும் மூல கர்த்தா தேவன்தான் என்று ஏற்கனவே போப் பயஸ் XII அருளியிருப்பது முக்கியமான ஒன்றாகும்.''

போப் அவர்களே! காலில் போட்டு மிதித்த சாத்தானின் கருத்தை 137 ஆண்டுகள் கழித்து சிறிது ஏற்கிறோம் என்று ஏன் நடிக்க வேண்டும். உலகத் தோற்றம் குறித்து பைபிள் கூறுவது நீங்கள் அறியாததல்ல.

''ஐந்து நாட்களில் அண்ட - பிண்ட சராச

படிப்பகம்

www.padippakam.com

ரங்களைப் படைத்த பரமபிதா, ஆறாவது நாள் களிமண்ணை உருட்டி ஆதாமை யும், அவன் விலா எலும்பிலிருந்து ஏவா ளையும் படைத்து விட்டு ஏழாவது நாள் ஓய்வெடுக்கச் சென்றார்.''

ஆறு நாட்கள் வேலை, ஏழாவது நாள் விடுமுறை என்பது தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமை என் றாலும் அந்த உரிமையை உங்கள் பரமபி தாவுக்கு வழங்குவதில் எமக்கு ஆட்சேப ணையில்லை.

ஆனால் டார்வினின் பரிணாமத் தத் துவத்தை சிறிது ஏற்றுக் கொண்டாலும் பைபிளின் முதல் அத்தியாயம் தவறா குமே! மாற்ற வேண்டுமே!

இல்லை. எதுவும் மாற்ற வேண்டிய தில்லை. போப்பின் அறிக்கைகளுக்கு பொழிப்புரை தருகிறார் கத்தோலிக்க திருச்சபையின் தகவல் தொடர்பாளர் பிரான்சிஸ் மானிஸ்கால்கோ. அதாவது போப்பின் பரிணாமத் தத்துவம் பற்றிய கருத்தை, அவர் மதத் தலைவர் என்ற முறையில் கூறியதாகவோ, கத் தோலிக்கர்களுக்கு வழிகாட்டும் கோட்பாடு என்ற முறையில் சொல்வதாகவோ தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாதாம்.

எங்களுக்குப் புரிகிறது. ஏன் இந்த இரட்டை வேடம்?

விஞ்ஞானிகள் தாங்கள் கண்ட உண்மைகளுக்கு உங்க ளின் அங்கீகாரத்தை வேண்டி நின்ற காலத்தில் அதை மறுத்தீர் கள். இன்று சந்திரனுக்கு விண்க லம் அனுப்புவது முதல், கணிப் பொறியின் இண்டர்நெட் வரை எந்த விஞ்ஞானியும் உங்களது அக்மார்க் முத்திரைக்கு ஏங்கவில்லை.

ஆனால் மதம் உயிர் வாழ்வதற்கும், காலத்திற்கேற்றவாறு புனரமைப்பதற்கும் அறிவியல் தேவைப்படுகிறது உங்க ளுக்கு. அதிலும் கடுகளவாவது நேர்மை இருக்கிறதா? இவ்வளவு காலம் திருச் சபை அறிவியல் அறிஞர்களைத் தவறாக நடத்தியது - இனி அப்படிச் செய்யமாட் டோம் என்று குற்றம் புரிந்த உணர்வுடன் பாவ மன்னிப்பு பெறுவதுதானே நியா யம்!

அறிவியலின் அற்புதங்களை அனு பவித்துக் கொண்டு தேவனின் 'அற்புதங் களை'ப் பிரச்சாரம் செய்வது; பிறகு தேவ னின் மகிமை காப்பதற்கு அறிவியலை அவமதிப்பது என்ற திருச்சபையின் திமி ருக்கும், இரட்டை வேடத்திற்கும் நீண்ட வரலாறு உண்டு.

மனிதனின் இன்பம் ததும்பும் வாழ்க்கை பரலோகத்தில் மட்டும்தான் என்று மாயை காட்டிய மதவெறியர்க ளின் கூற்றை பொய்யாக்கி பூமியில் அத்த கைய அற்புதங்களைச் சாதித்திருக்கிறது அறிவியல். நேற்றைய வானொலி முதல் இன்றைய கணிப்பொறி வரை அதன் சாத னைகள் தொடருகிறது. மனித குலத்தின் இத்தகைய பிரம்மாண்டமான அறிவியல் - தொழில் நுட்ப புரட்சிக்கு அடிப்படை யான விஞ்ஞான உண்மைகளைக் கண்ட வர்கள் மத்திய கால விஞ்ஞானிகள்.

இயற்கையின் புதிரை விடுவிக்க காட்டிலும், களத்திலும், கடலிலும் திரிந் தார்கள். ஊனையும் - உயிரையும் வருத்தி தான் கண்ட உண்மையை நிரு பிக்க தளராமல் போராடினார்கள். மதத் தின் பிடியிலிருந்து மனித சிந்தனையை விடுவிக்க திருச்சபையின் கழுவாய்க ளுக்கு தங்களது உயிரைக் கொடுத்தார் கள்.

பேராற்றல் மிக்க சிந்தனையும், போராட்டமும் கொண்ட இவர்களைத் தான் மாபெரும் மனிதர்கள் என்று குறிப் பிடுகிறார் ஏங்கெல்ஸ். இவர்கள் சிந்திய ஒவ்வொரு துளி ரத்தமும் அறிவியல் உல கம் அசுர வேகத்துடன் வளரக் காரணமா யிருந்தது. இவர்களது இழந்து போன வாழ்க்கையில்தான் இருபதாம் நூற்றாண் டின் மனிதகுல வாழ்க்கை உயிர் வாழுகி றது.



கோப்பர் நிகஸ்



கலீலியோ

> "மதத்தின்பிடியிலிருந்து மனித சிந்தனையை விடுவிக்க திருச்சபையின் கழுவாய்களுக்கு தங்களது உயிரைக் கொடுத்தார்கள். இழந்து போன இவர்களது வாழ்க்கையில்தான் இருபதாம் நூற்றாண்டின் மனித குல வாழ்க்கை உயிர்வாழ்கிறது"

இத்தகைய 'மாபெரும் மனிதர்க ளுக்கு' எதிராக போப்பும், திருச்சபை யும், ஏனைய பாதிரிகளும் நடத்திய பயங்கரவாத நடவடிக்கைகளை அறியும் நாகரீக உலகின் மனிதர்கள் எவரும் வெட்கப்படவேண்டும்; கோபம் கொள்ள வேண்டும்.

• அறுவை சிகிச்சையின் போதும், பிரசவத்தின் போதும் வலிதெரியாமல் இருப்பதற்காக பயன்படும் குளோரா ஃபார்ம் எனும் மயக்க மருந்தை இங்கி லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் யங் சிம்ஸன் சென்ற நூற்றாண்டில் கண்டுபிடித்தார். இதற்கு திருமறையில் ஆதாரமில்லையே என்று கடுமையாக எதிர்த்தார்கள் பாதிரி மார்கள். 'கஷ்டத்தில் நீ குழந்தை பெறு வாய்' எனும் பைபிளின் வாக்கியத்தைக் கொண்டு தாய்மார்கள் பிரசவத்தின் போது மயக்க மருந்து பயன்படுத்தக் கூடாது அப்போதுதான் தாயப்பாசம் இருக்க முடியும் என வற்புறுத்தினார்கள்.

• இரத்தத்தை வகை பிரித்து, இரத்த வங்கியில் சேமிக்கப்படும் முறையினால் உலகமெங்கும் பலகோடி மனித உயிர் கள் காப்பாற்றப்படுகின்றது. மனித ரத்தம் பற்றிய ஆய்வை நடத்திய 'குற்றத்திற்கா க' செர்வெட்டஸ் எனும் விஞ்ஞானி கழு மரத்தில் ஏற்றி உயிருடன் கொளுத்தப் பட்டார். பரமபிதாவின் புனிதம் காக்க இந்த தண்டனை வழங்கியவர் கால்வின் என்ற புராட்டஸ்டன்ட் பாதிரியார்.

• தேவனின் மகிமை கூறி ஆவியெழுப்ப, விமானமேறி உலகைச் சுற்றி சுற்றி வருகிறார் கள் சுவிசேசத்தின் ஊழியர்கள். தேவனின் செய்தியை திருச்சபை யின் விண்கோள்கள் பூமி உருண் டையின் மீது பொழிந்த வண் ணம் உள்ளன. ஆனால் உலகம் உருண்டையானது, தட்டையா னதல்ல, பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்ன கியார் டனே புருனோவை உயிரோடு கொளுத் தினார்கள் கத்தோலிக்க மத குருமார்கள்.

• 'வானுலகக் கோள்களின் சுழற்சி பற்றிய' தனது கண்டுபிடிப்பை 36 ஆண் டுகளுக்கு முன்பே நூலாக எழுதியும், திருச்சபையின் கொலை வெறிக்குப் பயந்து போன கோப்பர் நிகஸ் இறுதியில் தனது மரணப்படுக்கையில் இருந்து வெளியிட்டார்.

• பூமியின் இயக்கத்தையும், சூரிய னைச் சுற்றி வருவதையும் கண்டு சொன்ன கலிலீயோ திருச்சபையினால் சித்ரவதை செய்யப்பட்டார். அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனால் கலிலீயோ விவிலியத்தின் 'உல கம் பற்றி உண்மைகளை' ஏற்று தன் கண் டுபிடிப்புகளை மறுக்க வேண்டியிருந் தது. கலிலீயோவின் தொலைநோக் கியை சாத்தானின் கருவி என்றார்கள் கிறித்தவ பாதிரிகள்.

• கி.பி. 370-இல் அலெக்சாண்டிரி யாவில் (இன்றைய கெய்ரோ நகரம்) அரும்பாடுபட்டு சேர்த்து வைத்த நூலகத் தையும், அருங்காட்சியகத்தையும் ஆர்ச் பிஷப் சிரில் தலைமையிலான் பாதிரிப்

படிப்பகம்

www.padippakam.com

படை குறையாடிக் கொளுத்தியது. நூலகத்தலைவரும் பெண் விஞ்ஞானியுமான ஹைப்பேஷியாவை சித்திரவதை செய்து கொளுத்தினார்கள்.

• • •

விஞ்ஞானிகளை வேட்டையாடிய திருச்சபையின் ரத்தக்கறை படிந்த வரலாற்றின் ஒரு சில துளிகள் தான் இவை. அனைத்துலக பாதிரிகளின் எண்ணிக்கையை விட அவர்கள் இழைத்த குற்றங்களின் எண்ணிக்கை அதிகமானதாகும்.

இன்று மதிப்பிட முடியாத அளவுக்கு சொத்துக்களைக் குவித்து வைத்துக் கொண்டு திருச்சபையின் பாதிரிகள் வாழும் உல்லாச வாழ்க்கைக்கு வசதிகள் செய்தது அறிவியல்தான். விவிலியம் அல்ல.

கூன் விழுந்த முதுகுடன், மண் புழுவை மட்டும் மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டிருப்பார் டார்வின். தான் கண்ட மயக்க மருந்தை சோதனை செய்ய தன்னுடம்பையே கருவியாக்கி பல தடவை மயக்கமடைந்தார் சிம்ஸன். எந்த உண்மையையும் சோதித்தறிய



அலைந்து திரியும் கலிலீயோ தன் சொந்த வாழ்வின் எழிலைத் துறந்தார். மரணப் படுக்கையிலும் கூட கோள்களின் அமைப்பு பற்றி 'பிதற்றிக்' கொண்டிருந்தார் கோப்பர் நிகஸ். உயிரோடு கொளுத்தப்பட்ட போதும் விவிலியத்தின் முட்டாள் தனத்தை ஏற்க மறுத்தார் புருனோ.

எதிர்காலத்தில் திருச்சபை தமக்கு அங்கீகாரம் வழங்கும் என்ற நம்பிக்கையிலா இவர்கள் தங்களை வருத்திக் கொண்டார்கள்?

தேவனின் ஊழிர்களே சொல்லுங்கள். யார் பாவிகள், யார் சாத்தான்கள்.

குளிரூட்டப்பட்ட அறையில் நித்திரை கொண்டு, காலை எழுந்து உயர்தர ஒயினைக் குடித்து, வறுத்த முழுக் கோழியை முழுங்கி, பளபளக்கும் வெண்பட்டு அங்கியை உடுத்தி, மாருதி காரில் பவனி வந்து, தேவாலயத்தில் கூடியிருக்கும் மந்தைகள் முன்னால், புளித்த ஏப்பத்துடன், பாதிரி திருவாய் மலர்வார், ''கஷ்டத்தில் ஜீவிக்கின்ற கர்த்தரின் குழந்தைகளே சாத்தான்களிடமிருந்து விலகியிருங்கள்.''

எங்கள் விஞ்ஞானிகளின் கால் தூசி கூடப் பெறாத பாதிரிகளே இரண்டாயிரம் ஆண்டுகளாக நீங்கள் செய்து வரும் தேவ ஊழியம் இதுதானே!

'திருமறையில் ஆதாரமில்லையே' என்ற எந்த அறிவியல் உண்மைகளை மறுத்து விஞ்ஞானிகளை அழித்தீர்களோ அதே அறிவியலை உங்களுடைய வாழ்க்கையில் வெட்கமில்லாமல் பயன்படுத்தி வருகிறீர்களே. சுவிசேசப் பிரசங்கிகளே பதில் சொல்லுங்கள்.

போயிங் 707 விமானத்தில் அனைத்துப் பாதிரிகளையும் அள்ளிப் போட்டு இமயமலையின் உச்சியில் கொண்டு போய், பாராசூட் இல்லாமல் தள்ளிவிட்டால் நாங்கள் குற்றவாளிகளல்ல, ஏனென்றால் புவி ஈர்ப்பு விசையை கண்டுபிடித்த நியூட்டன் பைத்தியம் என்று பட்டம் கட்டியது திருச்சபை தான்.

**சந்திரனுக்கு விண்கலம் அனுப்பியது முதல், உயிர் காக்கும் மருந்துகள் வரை மனித குல ஊழியர்களான விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். கருணையே உருவான தேவனின் ஊழியர்களோ கழுமரத்தைக் கண்டு பிடித்தார்கள்.**

குடல்வால் அறுவை சிகிச்சைக்காக வாடிகனில் 3 ஆண்டுகள் தலைமறைவாயிருந்த போதுதான் போப் முன்னர் கண்ட அறிக்கையை வெளியிட்டார். சிம்ஸனின் ஆவியும், செர்வெட்டஸின் ஆவியும் போப்பிடம் வந்து நியாயம் கேட்டதோ! குளோரோஃபாமும், ரத்தமும் கிடையாது என மறுத்திருந்தால் போப்பின் கதி என்ன? அறிவியலின் ஒழுக்கம் அவ்வாறு செய்ய அனுமதிக்கவில்லை. ஆனால் கருணையே உருவான கடவுளின் ஒழுக்கம்தான் அதை அனுமதிக்கிறது.

இப்படி கொலை பாதக வரலாற்றைத் தெரிந்து கொண்டும் கல்லுளி மங்கன் போல சாந்த சொரூபியாகக் காட்சியளிப்பதற்குத்தான் கிறித்தவப் பாதிரிகளுக்கு பத்தாண்டுகால பயிற்சி கொடுக்கிறார்கள் போலும்.

'கிறித்தவத்தின் மாபெரும் ஞானி (ஏசு கிறிஸ்து) மக்களின் ஆத்மாக்களுக்கு விடுதலை கோரி, தமது உடம்பைத் தியாகம் செய்தார்; நவீனமான, கல்வியறிவு மிகுந்த ஞானியோ (பாதிரி) தனது சொந்த ஆத்மாவின் விடுதலைக்காக மக்களின் உடம்புகளைத் தியாகம் செய்கிறார்' என்று கார்ல் மார்க்ஸ் சொன்னதை நிரூபிக்கிறது 2000-ம் ஆண்டு கால திருச்சபையின் வரலாறு.

மனித குலத்தின் ஊழியர்களான விஞ்ஞானிகள் உயிர் காக்கும் முறைகளைக் கண்ட போது தேவனின் ஊழியர்களான பாதிரிகளோ கழுமரத்தைக் கண்டு பிடித்தார்கள்.

எனவேதான் தேவகுமாரனைச் சிலுவையில் ஏற்றியவன் பிலாத்தா, திருச்சபையின் முன்னோர்களா என்ற சந்தேகம் வருகிறது.

ஞாயிற்றுக் கிழமைதோறும் கோடிக்கணக்கான மக்களுக்குப் பாவ மன்னிப்பு அள்ளி வீசும் பாதிரி வகையறாக்கள் 2000 ஆண்டுகளாகச் செய்து வரும் குற்றங்களுக்கு யாரிடம் மன்னிப்பு. பெறுவார்கள்? ஒருவருக்கொருவர் பாவத்தையும் மன்னிப்பையும், பரிமாறிக் கொள்வார்களா? விவிலியம் இதற்கு என்ன தீர்ப்பு சொல்கிறது?

விஞ்ஞானம் வளர்ந்து விட்டதால் பூவுலகின் ஒழுக்கம் கெட்டுப் போய்விட்டது என்று இறுதி அஸ்திரம் ஒன்றை ஏவுகிறார்கள் பைபிளின் ஒழுக்கசீலர்கள். அதாவது களிமண்ணிலிருந்து ஆதாம் தோன்றினான் என்றால் ஒழுக்கம். பரிணாம வளர்ச்சி என்றால் ஒழுக்கக் கேடு. பூமி தட்டை என்றால் ஒழுக்கம். உருண்டை என்றால் ஒழுக்கக்கேடு. அதாவது பொய்யும், முட்டாள்தனமும் ஒழுக்கம். உண்மையும், பகுத்தறிவும் ஒழுக்கக் கேடு.

இந்த 'ஒழுக்கத்தை'ப் பிரச்சாரம் செய்ய அனுமதிக்காததால் முன்னாள் சோசலிச நாடுகளில் கம்யூனிஸ்ட்டுகள் கிறித்துவ மதத்தைக் 'கொர்டூரமாக' ஒடுக்கினார்கள் எனக் கூப்பாடு போடுகிறார்கள். 'புதிய ஏற்பாட்டின்' காவலர்கள். ரசியாவிலும், சீனாவிலும் இந்த 'ஒழுக்கத்திற்கு'க் கிடைத்த வெற்றியைத் தான் திருச்சபையும், தேவனாகிய அமெரிக்காவும் கைகோர்த்துக் கொண்டாடுகிறார்கள்.

• • •

இரத்தக் கறை படிந்த வரலாறு திருச்சபைக்கு மட்டும் சொந்தமானதல்ல; பார்ப்பன இந்து மதமும், இசுலாமும் தனித்தனியே வேத புத்தகங்கள் வைத்திருந்தது போலவே, தங்கள் சொந்தக் கழுமரங்களையும் நிறுவியிருந்தார்கள்.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கும் திருக்குர் - ஆனுக்கு 35 சிறப்புப் பெயர்கள் உண்டு.


படிப்பகம்

www.padippakam.com

அதில் ஒன்று அந் நதீர் - அச்சுறுத்தி எச்சரிப்பது. பைபிளில் பரமபிதா உலகை ஆறுநாட்களில் படைத்தார். குர் ஆனில் அல்லா உலகை ஆறு கட்டங்களாகப் படைத்தார். பரமபிதா களிமண்ணில் இருந்து ஆதாமைப் படைத்தார். அல்லாஹ் சுட்ட களிமண்ணிலிருந்து ஆதாமைப் படைத்தார். பைபிளுக்கும் குர் ஆனுக்கும் இடைவெளி 557 ஆண்டுகள்.

ஆனால் கடவுள் நங்களை எப்படிப் படைத்தார் என்ற உண்மையைத் திருக்குர் ஆன் விளக்கத்திலிருந்து தெரிந்து கொள்வதற்கு முன்னரே 6 நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த சிந்து சமவெளித் திராவிடர்கள் கடவுளைப் படைத்து விட்டார்கள் - சுட்ட களிமண்ணைக் கொண்டு.

தசாவதார தத்துவத்தை கைவசம் வைத்திருக்கின்ற பார்ப்பனர்களுக்கு படைப்புத் தத்துவம் பற்றி கவலை இல்லை. அப்படி என்றால் டார்வினின் பரிணாம தத்துவம்? தஞ்சை சரபோஜி நூலகத்தில் உள்ள ஓலைச் சுவடிகளிலிருந்து திருடப்பட்டதாக இருக்கலாம்.

> கடவுளைத் துரத்துவதை விட கடினமான பணி கடவுளின் ஏஜெண்டுகளைத் துரத்துவது தான்

இந்தக் கூற்றை திட்டவட்டமாக சைவர்கள் மறுக்கிறார்கள். தசாவதார நாயகன் விஷ்ணுவைப் படைத்தவன் சிவன் தான் என்கிறார்கள்.

ஆனால் கோஷ்டிப் பூசலின்றி அவர்கள் ஏற்கும் படைப்புத் தத்துவம் ஒன்று வேதத்தின் புருஷ சூக்தத்தில் இருக்கிறது. விராட் புருஷனின் தலையிலிருந்து பிராமணர்களும், தோளிலிருந்து க்ஷத்திரியர்களும், தொடையிலிருந்து வைசியர்களும், பாதத்தில் இருந்து சூத்திரர்களும் தோன்றினார்கள் என்ற 'உயரிய' படைப்புத் தத்துவம்தான் அது.

ஒரு வேளை டார்வின் தத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும், தரத்தால் பிரிக்கப்பட்ட நான்கு வகைக் குரங்குகள் அவர்களுக்கு தேவை.

• • •

ஈரேழு பதினாலு உலகங்களிலிருந்தும் கடவுளைத் துரத்தும் பணியை விஞ்ஞானிகள் செய்து விடுவார்கள். அதில் ஐயமில்லை.

ஆனால் கடவுளைத் துரத்துவதை விடக் கடினமான பணி கடவுளின் ஏஜெண்டுகளைத் துரத்துவதுதான். அதை விஞ்ஞானிகள் செய்ய முடியாது. அதற்குச் சமூக விஞ்ஞானிகள் வேண்டும். ஆம். கம்யூனிஸ்டுகள் வேண்டும்.

• இளநம்பி

# 'இராஜஸ்தானில் பெண்ணாய்ப் பிறப்பதே கொடுமை'

இராஜஸ்தான் - வீரபூமி என்று கொண்டாடப்பட்ட பூமி பெண்களுக்குப் பலிபூமியாகி வருகிறது. '95-'96-ல் பட்டியல் போடப்பட்ட சம்பவங்கள் மட்டுமே 1697. கடந்த 2 ஆண்டுகளில் இருமடங்காக உயர்ந்துவிட்டது.

பன்வாரிதேவி கற்பழிப்புச் சம்பவம் (புதிய கலாச்சாரம்: அக். '96) கொடூரமானது; சம்பவத்துக்குப் பிறகு நியாயம்வேண்டி அவர் அலைந்தது அதைவிட நூறுமடங்கு கொடூரமானது; அவலமானது. வெளிச்சத்துக்கு வராத எத்தனை பன்வாரிதேவிகள்?

தாங்க் மாவட்டம் உதர்ணா கிராமத்தைச் சேர்ந்த 40 வயது பழங்குடிப் பெண் தாபு பாயை எட்டுப் பேர் கூட்டுச் சேர்ந்து கற்பழித்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு பெரிய சாராய ஒப்பந்தக்காரனின் அடியாட்கள்.

தபு பாயின் கணவன் தனியே சாராயம் விற்க ஆரம்பித்ததே கற்பழிப்புக்குக் காரணம். கற்பழிப்புச் சம்பவங்களைக் கவனத்தில் எடுத்து பெண் உரிமை அமைப்புகள் போராட ஆரம்பித்த பிறகு இன்னமும் மிருகத்தனமான ஈனச் செயல்களைக் கற்பழித்தவன் முயலுகிறான். தபு பாயைக் கற்பழித்தவனில் ஒரு கயவன் அவளது கர்ப்பப்பையையே அறுத்தெடுக்க முயற்சி செய்திருக்கிறான் - கற்பழிப்புத் தடயத்தை அழிக்கும் முயற்சி. தபுவுக்கு 27 தையல்கள் போட்டார்கள். எத்தகைய ஆண்வெறி? இச்சம்பவத்தில் இதற்கும் மேலான கொடூரம் - மருத்துவ அறிக்கையில் கற்பழிப்பு பற்றி ஒரே ஒரு சொல்கூட இல்லை.

மற்றொரு சம்பவம் - 20 வயது ரசனா குப்தா என்ற ஆசிரியைக்கு நடந்தது. அரசு சமூகநல வாரியத் தலைவி ஷாலினி சர்மா. அவள் ரசனாவை மிரட்டித் தன் கணவனின் காமவெறிக்குத் தீனி போட்டாள். ஒன்றிரண்டு நாட்கள் அல்ல - ஒரு ஆண்டு முழுக்க.

கடந்த மே '96-ல் அதே ஷாலினி ஜெய்பூரில் ஓர் முதலாளிக்கு 'சப்ளை' செய்ய ரசனாவை மிரட்டி இழுத்துச் சென்றபோது அவள் தப்பி ஓடிவந்து விட்டாள். தந்தையிடம் முழுவதையும் அவள் சொல்லி அழ, இருவரும் சேர்ந்து அரசாங்க அலுவலகங்களின் படிக்கட்டுக்களில் ஏறிஏறி இறங்கியது தான் மிச்சம், நடவடிக்கை ஏதுமில்லை. கடைசியில் போலீசில் வழக்குப்பதிய அங்கும் ஒன்றும் நடக்கவில்லை: 'தேடினோம் கிடைக்கவில்லை' என்பதே பதில்.

தன் நிலத்தைத் திரும்பக் கேட்டாள் 45 வயது சந்துரி பாய். மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினரான ராம்சந்திர பன்வாரி என்ற மிருகம் அவளைக் கற்பழித்ததோடு நில்லாமல், அவளது பிறப்புறுப்பில் மிளகாய்த் தூளைச் செலுத்தி ஒரு தடிக் கம்பையும் செருகி வெறியாட்டம் போட்டது. போலீசில் புகார் போனபிறகும் நடவடிக்கை இல்லை, 1000 பேர் திரண்டு சென்று காவல் நிலையத்தைத் தாக்கிய பிறகே அவன் கைது செய்யப்பட்டான்.

மேலே சொன்ன இரு சம்பவங்களிலும் குற்றவாளிகள் பி.ஜே.பி. கட்சிப் பிரமுகர்கள். இந்தியாவுக்கு இந்துத்துவ ஒழுக்கத்தைப் போதிக்கும் இந்த நாய்களே கயவாளிகள்.

55 வயது கனிதேவி, 20 வயது இளம்பெண் ராஜூ ஆகிய இருவரும் கற்பழிக்கப்பட்டார்கள் - இதில் கொடுமையான விஷயம் ஊர் அவர்களை ஒதுக்கி வைத்துப் பேசுவது தான்.

பத்திரிக்கைப் பேட்டி கொடுக்கும் ஒரு தாய் சொல்வதுபோல 'ராஜஸ்தானில் பெ ண்ணாய்ப் பிறப்பதே கொடுமை'. இத்தகைய ராஜஸ்தான் பூமியில் அரசியல் அதிகாரம் யாரிடம் வந்திருக்கிறது? பி.ஜே.பி.-யிடம். சதி மட்டுமல்ல, பெண்கள் வாழ்வதற்கே இங்கு கொடுமைப்படுகிறார்கள். பெண்ணைத் தாயாகப் போற்றுகிறதாம் இந்துமதம்!?

படிப்பகம்

www.padippakam.com



கலாச்சாரப் புரட்சியின் போது, ஹார்பின் - வடகிழக்கு சீனாவில், மாவோவின் செய்தியோடு கிராமப் புறங்களுக்கு செல்லும் செங்காவலர்களின் அணிவகுப்பு

ரசியப் புரட்சி முடிந்து 80-ஆம் ஆண்டு தொடங்குகிறது. பொதுவுடமைக் கட்சிகள் மட்டும் வரலாற்றின் இவ்வொளியை ஏந்திச் செல்கின்றன. மேல்நிலை வல்லரசுகளின் கிடுக்கிப் பிடியில் மாட்டிக் கொண்டுள்ள உலகில் சோசலிச நாடு என்று எதுவும் இல்லை. மனித குலத்தின் இருளகற்ற சிவப்புச் சூரியன் தோன்றுவானா? சுரண்டலற்ற பொதுவுடமை சமூகம் என்பது கனவா?

தீபாவளிப் பண்டிகையின் பட்டாசுகள் ஓயவில்லை. மக்கள் நம் பக்கம் வருவார்களா? தலை கீழாக நின்று பார்த்தாலும் மக்களை திருத்த முடியவில்லையே?

கார்க்கியிடம் கேட்டோம்.

ரசியப் புரட்சியின் பின் பாட்டாளி வர்க்கத்துக்காக இலக்கியத்தின் துணை கொண்டு போராடியவர், தோழமையுடன் சொன்னார்:

• • •

என் வாலிபப் பருவத்தில் வாழ்க்கையைப் பற்றி என்றைக்கும் குறைபட்டுக் கொண்டதாக் எனக்கு நினைவில்லை;

என்னைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களுக்கோ குறைபட்டுக் கொள்வதிலே ஒரு பிரியம் இருந்தது. ஆனால் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதில் விருப்பமில்லாமலிருப்பதை அவர்கள் மறைப்பதற்காகத்தான் வஞ்சகமாக இப்படிச் செய்கிறார்க்ள் என்று உணர்ந்து கொண்டதும் அவ்ர்களைக் காப்பியடிப்பதைத் தவிர்க்க நான் முயன்றேன்.

அதிகமாகக் குறைபட்டுக் கொள்கிறவர்கள் தான் எதையும் எதிர்த்து சமாளிக்கத் திறனற்றிருக்கிறார்கள் என்றும், பொதுவாகவே மற்றவர்களின் மேல் எல்லாவற்றையும் போட்டுவிட்டு 'தாம் சுகமாக இருக்கப் பார்க்கிறவர்கள் என்றும் வெகு சீக்கிரத்திலேயே கண்டு கொண்டேன்.

எனக்குப் புரியாத விஷயங்கள் நிறைய இருந்தன என்றாலும், இந்த மாதிரி மனிதர்களுக்கு ''சகஜமான'' வாழ்க்கையை முழுக்க விட்டுக் தொலைப்பதற்கு முடியவில்லை என்று பட்டது. குட்டி பூர்ஷுவா என்ற நாடகத்தில் வருகிற குடிகாரப் பாடகன் சொல்கிற மாதிரி, இவர்கள் ''அறையிலிருக்கிற மேஜை நாற்காலிகளை மாற்றி மாற்றி வைத்து ஒழுங்கு செய்வது'' தவிர வேறொன்றும் செய்யத் திறனில்லாதவர்களே.

வாழ்க்கையில் அழகோ பொருளோ எதுவும் இருக்கவில்லை. சில்லிட்டுப்போன ஒட்டிக் கொள்கிற அர்த்தமின்மைதான் இருந்தது. இந்த நிலை எல்லோருக்கும் பழக்கமாகி விட்டிருந்ததால் யாருமே அதன் வறுமையை துயரச்சாயலை, ஆழமின்மையைக் கவனிக்கவில்லை.

**ஆம், தோழர்களே! உங்களிடத்திலும் உங்கள் பலத்திலும் நம்பிக்கை கொள்ளும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்; இடையூறுகளைச் சமாளிப்பதன் வழியேதான், சித்தத்தை எஃகு போல் ஆக்கிக் கொள்வதின் வழியேதான், அந்த நம்பிக்கையைப் பெற முடியும்.**

படிப்பகம்

www.padippakam.com

என்னைச் சுற்றி எங்கு பார்த்தாலும் கருமித்தனமான சின்னப் புத்தி படைத்த மக்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் பேராசை, பகைமை, கெட்ட எண்ணம், சண்டை சச்சரவுகள், வழக்காடல்கள் எல்லாம் எதிலிருந்து கிளம்பின தெரியுமா?

தனது கோழிக் குஞ்சின் காலை அண்டை வீட்டுக்காரரின் பிள்ளை ஒடித்து விட்டான், அல்லது சன்னல் கண்ணாடியை உடைத்து விட்டான், அல்லது ஒரு இனிப்புப் பண்டம் கெட்டுப்போய் விட்டது, முட்டைக்கோஸ் - சூப் அவசியத்துக்கு மேலாக வெந்துவிட்டது, அல்லது பால் கெட்டுவிட்டது என்ற காரணங்களுக்காக, ஒரு ராத்தல் சர்க்கரைக்கோ ஒரு கஜம் துணிக்கோ கடைக்காரன் கூடுதலாக ஒரு தம்பிடி வாங்கி விட்டானே என்பதற்காக, அவர்கள் மணிக்கணக்காக உட்கார்ந்து வருந்த முடியும்.

அண்டை வீட்டுக்காரனுக்கு ஏதாவது ஒரு சிறு துன்பம் ஏற்பட்டாலும் அவர்களுக்கு நிஜமான மகிழ்ச்சி பிறந்து விடும்; அனுதாபப்படுவதாகப் பாசாங்கு பண்ணி அதை மறைப்பார்கள். பிலிஸ்டைன் கனவுகாணும் பரலோகத்தில் ஜொலிப்பதெல்லாம் ஒரு தம்பிடி என்று நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன்; அதுதான் மக்களிடையே அற்பத்தனமான காசாசை பிடித்த பகைமையை உண்டாக்கி வந்தது.

சட்டிப்பானைகள், கோழி, வாத்துக்கள், முட்டைக்கோஸ், காய்கறிகள், தோஸ்ச், அப்பங்கள், மாதாகோவில் விஜயங்கள், ஜனன மரணச் சடங்குகள், மூக்குப்பிடிக்கத் தீனி, பன்றித்தனமான நடத்தை - இதுதான் நான் வளர்ந்த சூழலைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கையின் உள்ளடக்கம்.

அந்த அருவருக்கத்தக்க வாழ்க்கை எனக்கு சமயங்களில் மறந்துபோகிற அளவுக்கு மயக்கத்தை உண்டாக்கி விடும்.

ஆம், தோழர்களே! வாழ்க்கையின் பண்பற்ற தன்மையும் கொடுமையும் விளைவிக்கிற பீதியை நான் வெகுவாக அனுபவித்திருக்கிறேன். ஒரு சமயம் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குக் கூடச் சென்றிருக்கிறேன். அதைப் பற்றி நினைக்கிற போதெல்லாம் சுடுகிறமாதிரி ஒரு வெட்கமும் என் மீது எனக்கே ஒரு வெறுப்பும் உண்டாகிறது.

அந்தப் பீதியை நான் வென்று விலக்கியது எப்போது தெரியுமா? கெட்ட குணத்தை விட அதிகமாக மக்களிடம் குடிகொண்டிருப்பது அறியாமைதான் என்று நான் உணர்ந்து கொண்ட போது தான்;

என்னைப் பயமுறுத்தி வந்தது அவர்களுமல்ல என் வாழ்க்கையுமல்ல; சமூகத்தைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் என்னிடமிருந்த அறியாமை, வாழ்க்கையின் எதிரே தற்காத்துக் கொள்ளத் தெரியாத நிலை, கையறுந்த நிலை, இவைதான் எனக்குப் பயத்தையளித்து வந்தன என்று தெரிந்து கொண்டபோது தான்.

'ஆம், அதுதான் உண்மை விஷயம். இதைப்பற்றி நீங்களும் நன்றாக யோசிக்க வேண்டும் என்று தான் நினைக்கிறேன். ஏனென்றால், உங்களில் சில பேர் முனகுவதற்குக் காரணம் உங்களுடைய தற்காப்பற்ற நிலை பற்றிய உணர்வும், மனிதனை உள்ளும் புறமும் ஒடுக்கி வதைக்கிறதற்குப் "பழைய உலகம்" உபயோகிக்கிறதனைத்தையும் எதிர்த்து நிற்பதற்குள்ள திறமையில் நம்பிக்கையின்மையும்தான்.

விஞ்ஞானம், கலை, தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் மனித பலம் சாதித்த, உண்மையிலே மதிப்பும் நிரந்தமான பயனும் சௌந்தர்யமும் உள்ள, சாதனைகள் அனைத்தும் சில நபர்களால் சிருஷ்டிக்கப்பட்டவை;

அவர்கள் அவற்றை வர்ணனைக் கெட்டாத கஷ்ட நிலைமைகளிலே வேலை செய்துதான் சிருஷ்டித்தனர்; சமுதாயத்தின் ஆழ்ந்த அறியாமைக்கும், கிறிஸ்து மத நிறுவனத்தின் கொடிய பகைமைக்கும், முதலாளி வர்க்கத்தினரின் பேராசைக்கும், , கலை-விஞ்ஞானங்களைப் போற்றிப் பேணும் வள்ளல்களின் சபலத்துக்குரிய தேவைகளுக்கும் ஈடுகொடுத்து எதிர்த்த படிதான் சிருஷ்டித்தார்கள்.

இளைஞர்களாகிய நீங்கள் இதை உணர்ந்திருத்தல் வேண்டும். பண்பாட்டைச் சிருஷ்டித்தவர்களில் சாதாரண உழைப்பாளிகள் பலர் இருந்து வந்துள்ளனர் என்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும்;

உதாரணம், பாரடே என்கிற மகத்தான பொருளியல் விஞ்ஞானியும் புனைவாளர் ஆகிய எடிஸனும், நூல் நூற்கும் யந்திரத்தைப் புனைந்த ஆர்க்கரைட் ஒரு முடிதிருத்தும் தொழிலாளி; கலைச்சித்திர வேலைப்பாடுள்ள மண்பாண்டத் தொழிலைச் சிருஷ்டித்த தலைசிறந்த நபர்களில் பெர்னார்ட் பாலிஸ்ஸி என்பவரும் ஒருவர், அவர் ஒரு கொல்லன்; உலகறிந்த தலை சிறந்த நாடகாசிரியராகிய ஷேக்ஸ்பியர் ஒரு சாதாரண நடிகர்; மோலியேரும் அப்படியேதான்.

மக்கள் எப்படித் தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள முடிந்தது என்பதற்கு இம்மாதிரி நூற்றுக்கணக்கான உதாரணங்களைத் தரக்கூடும்.

உங்களிடத்திலும் உங்கள் பலத்திலும் நம்பிக்கை கொள்ளும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்; இடையூறுகளைச் சமாளிப்பதன் வழியேதான், சித்தத்தை எஃகுபோல் ஆக்கிக் கொள்வதின் வழியே தான் அந்த நம்பிக்கையைப் பெறமுடியும்.



பழைமையின் சின்னத்தனமான இழிந்த பாரம்பரியத்தை உங்களிடமிருந்தும் உங்கள் சூழலிலிருந்தும் அழித்து விட நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், பிறகு நீங்கள் எப்படி பழைய உலகத்தைத் துறப்பதற்கு (இந்தச் சொற்கள் தொழிலாளர் விடுதலை கீதம் என்று 1875-லிருந்து இருந்து வரும் ஒரு ருஷ்யப் புரட்சிப் பாடலிலிருந்து எடுக்கப்பட்டவை) சக்தி பெற முடியும்? அந்தப் பாடல் போதிக்கிறபடி நடப்பதற்கு உங்களுக்கு வலிமையும் விருப்பமும் இல்லாவிட்டால் அதை உங்களால் பாட முடியாது.

தன்னைத் தானே வென்றுகொள்வது கூட ஒருவனுக்கு எவ்வளவோ வலுவூட்டிவிடுகிறது. உடற்பயிற்சி ஒருவனுக்கு அதிக ஆரோக்கியமும் தெம்பும் தருகிறது என்று உங்களுக்குத் தெரியும். அதே மாதிரியான பயிற்சியை மனத்திற்கும் சித்தத்துக்கும் தர வேண்டும். ●

('நான் எவ்வாறு எழுதக் கற்றுக் கொண்டேன்' — மாக்ஸிம் கார்க்கியின் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது)



மாஸ்கோவில் இவ்வாண்டின் நவம்பர் புரட்சி அணிவகுப்பு



படிப்பகம்

www.padippakam.com

# இன்னும் எத்தனை உதவும் கரங்கள்...

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் - என்றார் வள்ளலார். நல்லதுதான், ஆனால் பயிர் ஏன் வாடியது என்பதைப் 'பரிசீலித்தால் அல்லவா பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கப் பயன்படும். பிறர் துன்பத்தை ஏறிட்டுப் பார்க்கும் எல்லோர்க்கும் இந்த சமுதாயத்தில் வாடி வதங்கும் சீவன்களைப் பார்க்கும் போது இரக்க உணர்வும், உதவும் மனநிலையும் வந்து விடுகிறது. ஆயினும், இந்தப் பெருங்கருணையே துன்பத்தைத் தீர்க்கவும் அதைத் தோன்றவிடாமலும் செய்து விடுமோ?

''இந்தியாவில் தெருவுக்கு ஒரு பிச்சைக்காரர், ஐம்பத்தைந்து சதவீத குழந்தைகள் கடுமையான வேலைகளில் வதைக்கப்படுகிறார்கள். நகரங்களில் பிச்சையெடுக்கும் சிறுவர்களையும், ஆதரவற்ற குழந்தைகளையும் பார்க்க முடிகிறது.'' இது சமீபத்தில் இந்தியாவிற்கு வந்து ஆய்வு செய்த பதின்மூன்று வயது கனடா நாட்டுச் சிறுவன் கிரய்க்கில்பார்க்கின் ஆய்வறிக்கை சொல்லும் தகவல். தகவல் நமக்குப் புதிதல்லவே!

அன்றாடம் பேருந்து நிறுத்தங்களிலும், தொடர் வண்டிகளிலும், பொது இடங்களிலும் - ''அம்மா... ஸார்... அய்யா'' என்று நீளுகின்ற கைகள் நம் கவனத்தை திசை திருப்புவது வாடிக்கையாகி விட்டது.

நசுங்கிய ஈயக் குவளை, வாயில் துண்டு துண்டாக ஒரு சினிமாப் பாட்டு, அழுக்கான கைகள் சீண்டும் போது சட்டை கசங்கிய வெறுப்பில் எரிச்சல் வருகிறது சிலருக்கு. கண்ணை உறுத்தும் சிலருக்கு கருணை பிறக்கிறது. இயன்றதை எடுத்துப் போடுகிறார்கள். தனது சமூக உணர்வுக்கு உரிய விலை கொடுத்து விட்டதாய் ஒரு திருப்தி, தனக்கான புண்ணியத்தை பகவானின் படைப்பு வழியே கொடுத்து - பெற்றுக் கொண்டதாய் ஒரு நிறைவு.

தனக்கும் மேலாக கட்டுக்கட்டாக உதவுபவர்கள், காப்பகம் வைத்து ஆதரிப்பவர்களைப் பற்றிக் கேட்கும் போது-பார்க்கும் போது அவர்களின் நல்ல மனதை எண்ணி வியக்கும் மனது நாள்தோறும் கூடிக் கொண்டிருக்கும் ஆதரவற்றோர் எண்ணிக்கையைக் கண்டு அதிர்ச்சியடைவதில்லை. ஆம். இருட்டிலேயே இருப்பவன் வெளிச்சத்தைக் கண்டதும் இடறி விழும் எதார்த்தம்தான் இந்த உளவியலும். ஏதோ விதிவிலக்காய் ஒன்றல்ல, குழந்தைகள், பெண்கள் முதியவர்கள் எனப் பல பிரிவினரும் ஆதரவற்றோராய் ஆகியதன் மர்மம் தான் என்ன?

'பிழைப்பதற்கு வழியா இல்லை, வேலவெட்டி செய்யாம பிச்சையெடுத்தே பொழய்க்கறது ஒரு தொழிலா போச்சு ஸார்' என்று நச்சரிப்பு தாங்காமல் வக்கணை பேசும் ஆய்வாளர்களுக்குத் தெரியுமா, வேலைக்குப் போனவர்களின் கதை.

மன்னார்குடிக்குப் பக்கத்தில் கூத்தாநல்லூரில் தாயை துபாய்க்குத் துரத்தியது வாழ்க்கை. தகப்பனோ வேறொரு பெண்ணோடு ஒதுங்கி விட்டான். பனிரெண்டு வயது தெளலத்உனிசாவின் தனிமை அவளை சென்னைக்கு விரட்டியது. ஒரு வீட்டில் வேலைக்காரியாக விற்கப்பட்டாள். வீட்டு வேலையில் சிறு தவறு நேர்ந்ததற்காக உனிசாவை கை, கால், தொடை, பாதம் என கண்மண் தெரியாமல் சூடு வைத்ததோடு, வெந்த புண்ணோடு வேலை செய்ய மிரட்டியுள்ளன, விலைக்கு வாங்கிய மிருகங்கள்.

அடிமைகளுக்கு அனிச்சைச் செயல் கூட உரிமையில்லை என்பது தானே எசமானர்களின் விதி. துவண்டு போன நேரத்தில் உனிசாவை மீட்டுள்ளது சேவை அமைப்பு.

வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் ஜஃப்ராபேட் கிராமத்தின் எட்டு வயது சிறுமி மைதிலியின் ஏக்கம் இது. ''எங்கம்மா அப்பா பாத்திரம், நகைய அடகு வச்சா கூட மூட்டுருவாங்க எங்கள மூக்கறதே இல்லை''. இப்படி பீடி கம்பெனி ஏஜெண்ட்டுகளிடம் நூற்றுக்கணக்கான மைதிலிகள் கொத்தடிமைகளாக விற்கப்பட்டுள்ளனர்.

உழைப்புக்கேற்ற ஊதியமும், உத்திரவாதமற்ற வாழ்க்கையுமுள்ள பலரில் ஒன்றிரண்டு சிறுமிகளை உதவும் கரங்கள் போன்ற சேவை அமைப்புகள் மீட்டுக் காப்பாற்றலாம். ஆனால் கிராமம் கிராமமாக, குடும்பம் குடும்பமாகப் பல்வேறு மாவட்டங்களில் இதுதான் வாழ்க்கை.

ஐந்தாண்டு திட்டம் போட்டு திவாலாக்கப்பட்ட இந்தியாவின் ஆயிரக்கணக்கான கிராமங்களை எத்தனை உதவும் கரங்கள் கொண்டும் மீட்க முடியாது என்பதுதான் நிலைமை. நிலைமையின் தீவிரத்திலிருந்து; ஒரு அதிரடியான சமூக மாற்றக் கருத்துக்களுக்குப் பதில் அனுசரணையான எண்ணத்தை இயன்ற வரை உருவாக்குவதுதான் யுனிசெஃப் முதல் உதவும் கரங்கள் வரைக்குமான செயல்களின் விளைவு என்பதைக் கொஞ்சம் கூர்ந்து கவனித்தாலே புரியும். குழந்தைகளின் நிலைமை மட்டுமல்ல இளமை முதல் முதுமை வரை அனைவரையுமே நிர்க்கதியாய்ப் புறந்தள்ளியிருக்கிறது இந்த ஐம்பத்தாண்டு கால 'சுதந்திரம்'. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சிவசாமி உளுந்தூர்ப்பேட்டையில் ஒரு சிறு விவசாயி. இன்று அண்ணாசாலையில் ஒரு பிச்சைக்காரர். ''உள்ளூர்ல சுத்துனா கேவலமா இருக்கும்னு இங்க வந்துட்டேன்'' என்பது சிவசாமியின் கருத்து மட்டுமல்ல. இன்றைய சமூகத்தின் கருத்தும் 'பிறர் கண்ணை உறுத்தாமல் பிச்சையிடுவது'' என்பதுதானே. ஸ்வபிமான் அமைப்பைச் சேர்ந்த கமீலா நாசரின் கவலையும் இதுதான்: ''இப்போது என் மனதை உறுத்திக் கொண்டிருப்பது ஒன்றல்ல. முதலாவது டிராபிக் சிக்னல்களில் நிற்கும்போது கையில் குழந்தைகளுடன் வந்து பிச்சை கேட்கும் பெண்கள். இவர்களைப் பிடித்துக் கொண்டு போய் அரசாங்கத்தால் மறுவாழ்வு கொடுக்க முடியாதா?! அக்கறை சரிதான். ஆனால் இவர்களுக்கு முதல் வாழ்வே கிடைக்காமற் போனதற்கான காரணங்களைக் களைந்தால் இப்படி மறுவாழ்வுக்கான மடிப்பிச்சை தொடராதே.

உதவி செய்ய முன்வரும் சமூக சிந்தனையாளர்களுக்கு இது தெரியாத விஷயமல்ல, நடிகை ரேவதி சொல்வது போல, ''சமூகசேவை என்று முற்றும் வந்துவிட முடியாது. எங்களுக்கும் குடும்பம், வாழ்க்கை, தொழில் இருக்கிறது முடிந்தவரை 'உதவுகிறோம்'' இந்த ''முடிந்தவரை, இயன்ற வரை'' என்பதுதான் நடப்பிலுள்ள நயத்தகு நாகரிகம். பொது இடங்களில் தனது கௌரவத்தின் மேல் கைவைக்கும் பராரிகளுக்கு இயன்றதை எடுத்துப் போட்டு தனது சமூக மதிப்பைக் காப்பாற்றிக் கொண்டு தப்பிக்கும் மனநிலைதான், இப்படி உதவும் கரங்களைக் கண்டு புளகாங்கிதமடைகிறது. இந்தச் சமூகத்திலிருந்து சொத்து சேர்த்த பிரிவினர் தமது குற்ற உணர்வை பிச்சை கொடையாகத் தந்து நிறைவு கொள்ளும் போது, ஏற்கனவே ஆளும்வர்க்கத்தின் கௌரவப் பிச்சையில் காலம் தள்ளும் நடுத்தரவர்க்கமோ எரிச்சலடைவதும், 'இச்சு' கொட்டுவதுமாய் தனது இயலாமையைத் தீர்த்துக் கொள்கிறார்கள். சமூகத்தில் அபலைகள், தொழுநோயாளிகள், கூலி உழைப்பாளிகளை மட்டுமல்ல, நுகர்பொருள் கலாச்சாரம் அனைத்துக் குடும்பங்களையும், உறவுகளையும் சீரழித்துள்ளது. 'பைவ் ஸ்டார்' வாங்கித்தராதவன் ஒரு அப்பனா, என மகனையும், 'பட்டுப்புடவையும், ஒரு கல்யாணி கவரிங்கை கூட வாங்கித்தராதவன் புருஷனா' என மனைவியையும் எதிரெதிராய் நிறுத்துகிறது. எதையும்



படிப்பகம்

www.padippakam.com

நாலு சுவருக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று தனி மனித ஒழுக்கம் பேசும் நடுத்தர வர்க்கம் பண்ட உறவில் உடைப்பெடுத்து 'விஸ்ராந்தி' போன்ற முதியோர் இல்லங்களிலும், சிவானந்த குருகுலத்திலும் ஏற்றிப் போற்றிய தனது குடும்ப மாண்புகளைச் சபித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வறுமைக் கோட்டுக்குக் கீழே அல்லாடுபவர்களை மட்டுமல்ல. வறுமைக் கோட்டுக்கு மேலே தள்ளாடும் மனிதர்களுக்கும் ஒரு உத்திரவாதமற்ற நிலைமையை இச் சமூக அமைப்பு உருவாக்கிவிட்ட பிறகு, எத்தனை யுனிசெஃப்கள், எத்தனை ஸ்வாபிமான்கள், உதவும்கரங்களால் இதைச் சரி செய்வது?! பாதி அளவுக்கு மேலும் மேலும் சமூகம் நிர்கதியாக்கப்படும் நிலை கண்டு வருமுன் காக்க சேவை செய்ய வந்துவிட்டார்கள் நீதிபதிகளும், சினிமா நட்சத்திரங்களும், அரசு அதிகாரிகளும். பின்னே! இவர்களின் கார்களுக்கு குறுக்கே வருமளவுக்கு வறுமைக்கோடு வளர்ந்த பிறகு சும்மா இருக்க முடியுமா இவர்களால்?

எத்தனை உதவும் கரங்களானாலும் ஏழைகள் ஏதிலிகள் பால் நாம் காட்டும் இரக்க உணர்வு மட்டுமே அவர்களின் வாழ்க்கை நிலையை மாற்றி விடுமா?! இரந்துண்டு வாழும் இழிவை அனுபவிக்கும் போதல்லவா அதன் கொடுமை தெரியும். ''பிச்சை புகினும் கற்கைநன்றே'' என்று பெரிய மனசு பண்ணிப் பாடியதை யாராவது தன் பிள்ளையின் மேல் பிரயோகிக்கும் சூழ்நிலையை விரும்புவதுண்டா? உணவு விடுதிகளில் முன்பெல்லாம் வெளியே வீசி எறியும் எச்சிலைகளில் விழுந்து புரளும் மனிதர்கள் கண்ணை உறுத்தியவுடன், கருணைக் கணவான்கள் இப்பொழுது தனது கல்லா பெட்டிக்கு மேலேயே ''உதவுங்கள்'' என்று மிச்சம் மீதிகளை எச்சிலைகளுக்கு பதிலாக எச்சில் காசுகளாய் மாற்றிக் கொள்ள முடிந்ததே தவிர நிலைமை மாறவில்லை. உங்கள் கருணை உள்ளம் காசு போட்டுவிட்டு வரும்போதே வாசலில் ஐயா என ஒரு கை நீளும்போது உங்களால் எத்தனை பேருக்கு உதவ முடியும் என்ற கேள்வியை எத்தனை உதவும் கரங்களால் முடியும் என்பதுவரை எழுப்பி யோசித்துப் பாருங்கள். உணவு விடுதி மட்டுமல்ல, சில வங்கிகளிலும் உங்களின் மீத மருந்துகளை இங்கே நன்கொடையாகத் தாருங்கள் என்ற பெட்டி வந்துவிட்டது. இப்படிச் சமூகத்தின் தேவைகளனைத்தையும் பிச்சையெடுத்தே, நன்கொடை வழியிலேயே தீர்த்து விட இயலுமா?!

புதிய தொழிற்கொள்கைக்காகத் தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவதும், விரட்டப்படுவதும், ஏற்றுமதி உற்பத்திக்காகக் காடு கழனிகள் பாலையாக்கப்பட்டு, தேக்குத்திட்டம் போட்டு விவசாயம் கழிக்கப்படுவதும் இதன் விளைவாகச் சமுதாயத்தின் ஒரு பகுதி மக்களையே வாழ வழியற்றோராய் நகரத்தை நோக்கித் துரத்துகிறது வாழ்க்கை. ஒரு வேளைச் சோற்றுக்கே உத்திரவாதமில்லா நகரத்தில் இந்தப் புதிய அணி சேர்க்கை ஒரு புறம் சமுதாயத்தின் மேல் கையை ஓங்கும் சமூக விரோத சக்திகளையும், மறுபுறம் சமுதாயத்திடம் கையேந்தும் புறந்தள்ளப்பட்டவர்களையும் உருவாக்கி விடுகிறது. இதற்கு எந்த வகையான மாற்றுத் திட்டமும், நோக்கமும் இல்லாத அரசும் ஆட்சியாளர்களும், பண நாயகர்களும் இந்த மோதலை ஊடலாக மாற்ற ஒரு வடிகாலாக சேவை அமைப்புகள் சேர்ந்து கொள்கின்றன. தான் வந்தால் எல்லாம் நடக்கும் என்று நாற்காலிக்கு வரும் நாயகர்கள், தன்னால் எதுவும் நடக்காது என்றவுடன் சமூக சேவை அமைப்புகளுக்கு வரிச்சலுகை, இடவசதி சலுகை, கட்சி நிதி, பிறந்தநாள் உதவி என்று பண்ணிய பாவங்களின் கணக்கை புண்ணியச் செலவில் சரிக்கட்டுகிறார்கள்.

இந்த வழிமுறைகளைப் பின்பற்றி சமூக விரோதிகள் கூட இப்போது சேவை செய்ய வந்துவிட்டார்கள். பிரேமானந்தா போன்ற சமூக விரோதிகள் சேவாஸ்ரமம், ஆன்மீகச்சேவை என்ற பெயரில் அரசு சலுகை மூலம் நிலத்தை வளைப்பது, குடிலமைப்பது, கருப்பு பணத்திற்கு பினாமி வேலைகள் செய்வது, பெரும்புள்ளிகள் கூடி பேரம் பேசும் மையமாக மாற்றிக் கொண்டு மெல்ல மெல்ல சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு அன்னதானம், இலவச கண்சிகிச்சை, இதய சிகிச்சை, பள்ளிக்கூடம் கட்டுவது என்று பங்காரு அடிகள், சாயிபாபா உள்ளிட்ட சகலருக்கும் இந்தச் சேவை முகமூடி மெல்ல மெல்ல சமூக விரோத சக்திகளுக்குப் பிரச்சினையற்ற தொழிலாக, புகலிடமாக மாறிக் கொண்டிருக்கிறது.

பற்றற்றுப் பரதேசியாய் முற்றும் துறந்தவர்களுக்கு விருந்து படைக்கவே செல்வம் பெருக்கியதாய் அப்பூதியடிகள் தனது வணிக லாபத்திற்கு ஈசனருள் வேண்டியது திருவிளையாடற் புராணம். ''அழகிப் போட்டியின் விளம்பரங்களின் மூலம் கிடைக்கும் தொகையை மனவளர்ச்சி குன்றிவர்களுக்காகக் கொடுத்து விடப் போகிறேன்'' இது அமிதாப்பச்சனின் அழகிப் போட்டி புராணம். காலங்கள் மாறினாலும் இவர்களின் காருண்யத்தின் ஆணிவேர் கல்லாபெட்டியில் இருப்பது புரிகிறதா?

அமைச்சர் பெருமான்களும், கோமான்களும் பண்டிகைகாலம் வந்துவிட்டால் சிவானந்தா குருகுலம், உதவும் கரங்கள், சேவை மையங்கள், அனாதை ஆசிரமங்கள் வந்து அவர்களுடன் பக்கத்தில் அமர்ந்து உணவருந்தி, புத்தாடை கொடுத்துக் கொண்டாடும் பெரிய மனிதர்களைப் பார்க்கும்போது அந்த 'கண் கொள்ளாத காட்சியில்' கருத்தை இழப்பவர்கள், இவர்களை குடும்பத்தோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட முடியாமல் தடுப்பது எது என்பதுபற்றி கவனம் கொள்வதில்லை. வள்ளல்களை நினைந்து வறுமை நிலையை மறப்பது தானே நமக்குச் சொல்லிக் கொடுத்த பண்பாடு.

ஆனாலும் இத்தனை உதவிகளையும் தாண்டி மீண்டும், மீண்டும் சார், அய்யா! அம்மா என்று நாள்தோறும் பின் தொடர்கின்றன 'புள்ளி விவரங்கள், கைவிடப்பட்டோர், வாழ வழியற்றோர்' என்று வகைப்படுத்தப்பட்டிருக்கும் இந்த மனிதர்களைப் புறந்தள்ளியது எது? நாடெங்கும் உள்ள நமது லட்சக்கணக்கான சகோதரிகள் விபச்சாரிகளாக்கப்பட்டதை உணர்ந்து வெறுப்புறும் தலைமுறைக்கு ''செக்ஸ் தொழிலாளிகள்'' என அவர்களைப் பதமாக அழைக்க அல்லவா பழக்கப்படுத்துகிறது இந்த சேவை அமைப்புகளும், அதன் நவீன அறிவாளிக்கூட்டங்களும்.

விவசாயிகளிடமிருந்து விவசாயத்தை, தொழிலாளர்களிடமிருந்து தொழிற்சாலையைப் பிடுங்கிக் கொண்ட கரங்களைப் பற்றிப் பேசிப் பாருங்கள் அங்கே உதவும் கரங்கள் நீளாது, அறிவொளி பாயாது. இந்த உண்மைகளோடு ஒத்துப்பார்த்தால் தான் உதவும் கரங்களின் ஒவ்வாமை புரியும்.

சமூகம் முழுமைக்குமான சொத்தை சுரண்டிச் சேர்த்தவர்கள், சமூகம் முழுமைக்குமே சோறுபோட நமது கருணைக் கதவுகளைத் திறக்க மாட்டார்கள். காருண்யவாதிகளின் சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரத்திற்கு முட்டுக் கொடுப்பதற்காகத்தானே ஒழிய விட்டுக் கொடுப்பதற்காக அல்ல.

ஏற்கனவே கடுமையான பொருளாதார நெருக்கடியால் ஏதுமற்றவர்களாய் சமூகத்திலிருந்து புறந்தள்ளப்பட்டவர்கள் போக, நடுத்தர வர்க்கத்தின் கௌரவ வாழ்க்கையும் தற்போது காலாவதியாகி வேலையற்ற பட்டாளமாய், போதிய ஊட்டச்சத்து, உணவுச் சத்தின்றி, கண் பார்வையற்ற, முடமாக்கப்பட்ட புதிய தலைமுறைகளையும் இச்சமூக அமைப்பு உருவாக்கி வருகிறது. இவ்வாறு சரிபாதியினர் குடும்பம் குடும்பமாக கையேந்தும்படி வறுமைக்கோடு நீண்டு கொண்டே போகும்போது இன்னும் எவ்வளவு தூரம் நீளும் இந்த உதவும் கரங்கள்? வள்ளல்களின் மீது விழுந்திருக்கும் உங்களின் வாஞ்சையான பார்வையை, கொஞ்சம் கையேந்தும் மனிதர்களின் சூழ்நிலைக்கான காரணத்தின் மீது திருப்புங்கள். செய்ய வேண்டியது விளங்கிவிடும்.

• சுடர் விழி



படிப்பகம்

www.padippakam.com

# காதல் கோட்டை ✪ காதல் தேசம்

## கவலைப்படு சகோதரா!

பாலுறவு வாழ்க்கையில் (காதலில்) மனிதனுக்கு இயற்கையால் தரப்பட்டவை மட்டும் வெளியாகவில்லை. கலாச்சாரத்திலிருந்து பெறப்பட்டவையும் (அவை உயர்ந்த மட்டமோ, தாழ்ந்த மட்டமோ) வெளியாகின்றன என்றார் லெனின்.

ஆதிமுதற் காதலர்கள் என்று அறியப்படும் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இயற்கை அளித்த உணர்ச்சி காதல் அல்ல; ஏவாளுக்குப் பதிலாக ஒவாள் என்றொரு பெண்ணை ஏதேன் தோட்டத்தில் காண நேர்ந்திருந்தாலும் ஆதாம் அவளுடன் சேர்ந்திருப்பான்; அவர்கள் விலக்கப்பட்ட கனியைப் புசித்திருப்பார்கள். ஏனென்றால் அது வெறும் பாலுணர்வு - விலங்குணர்வு.

அழகு, அறிவு, அந்தஸ்து, ரசனை ஆகியவற்றையெல்லாம் பார்த்து இவற்றில் ஏதோவொரு விதமாக ஈர்க்கப்படும் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்புவதைத்தான் நாம் காதல் என்று அழைக்கிறோம்.

ஆணும் பெண்ணும் சுதந்திரமாகப் பழகுவதற்கும் அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் தனக்குப் பொருத்தமான துணையைத் தெரிவு செய்து கொள்வதற்கும் போதுமான வாய்ப்புகள் நமது சமூகத்தில் இல்லை. இரு பாலருக்குமிடையில் ஒரு அநாகரிகமான இடைவெளியைப் பராமரிப்பதை நமது சமூகம் தனது பண்பாட்டின் உயிர்நாடியாகக் கருதுகிறது. இதன் விளைவாகவே காதல் மணம் புரிய விரும்பும் பல ஆண்களும் பெண்களும் அதற்கு வாய்ப்பில்லாமல் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட படுகுழியில் விழவேண்டியிருக்கிறது. சாதி, மதம், அந்தஸ்து போன்ற பல காரணங்களால் காதலர்கள் பிரிக்கப்பட்டு பெரியோர்கள் தோண்டிய படுகுழியில் தள்ளப்படுவதையும் பார்க்கிறோம். இருந்தாலும் திருமண விசயத்தில் மாடுகளைக் காட்டிலும் மனிதர்களுக்கு அதிக உரிமை இருக்கிறது என்ற உண்மையை நிரூபிப்பதற்கு நம் கைவசம் இருக்கும் ஒரே ஆதாரம் - தாலிக்கயிறு.

நிலைமை எவ்வளவு மோசமாக இருந்த போதிலும் சுமார் 30,40 ஆண்டுகளுக்கு முன்னால் கருதப்பட்டு வந்ததைப் போல 'காதல்' என்பது ஒரு கெட்டவார்த்தையாகக் கருதப்படுவதில்லை என்பதற்காக நாம் கொஞ்சம் மகிழ்ச்சியடையலாம். அதே நேரத்தில் காதல் என்பது பெற்றோருக்குத் தலைவலியாக இருந்த நிலைமைபோய் இளைய சமுதாயத்திற்குத் திருகுவலியாக மாறி வருகிறது என்ற உண்மையையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான இந்த 'அநாகரிக' இடைவெளியில் ஆதாயம் அடைந்தவர்கள் தான் எத்தனை பேர்? வயசுக்கு வராத காதல், வயசு போன காதல், சொன்ன காதல், சொல்லாத காதல்... என்று எத்தனை படங்கள்! நமது 'அவல' நிலையைப் பல்வேறு கோணங்களில் நமக்கே படம் பிடித்துக் காட்டி கோடீசுவரர்கள் ஆன நடிகர்கள், இயக்குனர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரை ஒரு கனம் பட்டியல் போட்டுப் பாருங்கள்! காதலின் காணிக்கையாக நாம் இவர்களுக்கு இதுவரை செலுத்தியுள்ள தொகையில் இந்தியா வாங்கிய கடன்களை மட்டுமல்ல, வாங்க விருக்கும் கடனையும் அடைத்து விடலாமே! எனவே ஒரு பொருளாதாரப் பிரச்சினை என்ற முறையிலாவது நாம் இதனைப் பரிசீலிப்பது அவசியமாகிறது.

• • • • • •

'காதல் கோட்டை' நூறு நாட்களைத் தாண்டி ஓடுகிறது. காதல் தேசம் நூறு நாட்களை நோக்கி ஓடுகிறது. முன்னது 'தரமான' குடும்பச் சித்திரம். பின்னது சற்றுத் தரம் குறைந்த மாணவர் சித்திரம்.

திருட்டுப் போன தனது கைப்பையைத் திருப்பியனுப்பிய (அநாதை) கதாநாயகன் மீது காதல் கொள்கிறாள் நாயகி. ''கண்ணாலே பாத்து பாத்து வந்த காதல் நூறடா - கண்ணியமான காதல் இக்காதல் தானடா' என்று விழியில் விழாமலேயே இதயத்தில் எகிறிப் பாய்ந்து கடைசியாக உயிரில் கலக்கிறார்கள் - இது காதல் கோட்டை.

இரண்டு மாணவர்கள் ஒரு மாணவியைக் காதலிக்க, இருவரது காதலின் ஆழத்தையும் கண்டு நெகிழ்ந்து போகிறாள் அந்தக் காதலி. கடைசியாக இரண்டு பேருடைய காதலையுமே ரத்து செய்வதன் மூலம் அவர்களுடைய காதல் மீது தான் கொண்ட மரியாதையைத் தெரிவிக்கிறாள் - இது காதல் தேசம்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கண்ணியமான முறையில் காதலித்து 'கண்ணியக் குறைவான' நோக்கத்திற்காக இணைவது ஒரு படம். கண்ணியக் குறைவான முறையில் காதலித்து 'கண்ணியமான' நோக்கத்தில் இணைவது இன்னொரு படம்.




இவற்றின் வெற்றியிலிருந்து தெரியவரும் உண்மை என்ன?

உண்மையைத் திரைப்படத்தில் தேடுவதை விட ரசிகர்களிடம் தேடுவோம். திரையரங்கினுள் தேடுவதை விட திரையரங்கிற்கு வெளியே தேடுவோம்.

''உங்கள் காதலைத் தெரிவிக்க தங்கத்தைக் காட்டிலும் சிறந்தமொழி வேறென்ன இருக்கிறது?'' என்று கேட்கிறது ஒரு நகைக்கடை விளம்பரம்.

''முற்காலத்தில் காதலர்கள் தங்கள் காதலை நிரூபிக்க வில்லை முறிப்பது, குதிரையை அடக்குவது, மாடு பிடிப்பது போன்ற ஆபத்தான விவகாரங்களில் தலை கொடுக்க வேண்டியிருந்தது. மணிபர்சைத் திருப்பிக் கொடுத்தால் போதுமா



படிப்பகம்

www.padippakam.com

> ''பொருளாதார உறவுடன் காதல், குடும்பப் பாசம் ஆகியவற்றைப் பேசுவது சிலருக்கு அதிர்ச்சியளிக்கலாம். காரணம் காதல் பற்றிய நமது புரிதல் அத்தனை ஆழமாக இருக்கிறது என்பதல்ல; பொருளாதார உறவுகள் குறித்த நமது புரிதல் அத்தனை ஆழமற்று இருக்கிறது என்பதுதான். இது காதலைக் கொச்சைப்படுத்தும் முயற்சி அல்ல; கொச்சைப் படுத்தப்பட்ட காதலைப் புரிந்து கொள்ளும் முயற்சி.

ளது என்கிற அளவுக்கு இன்று நிலைமை சீர்திருந்தியிருக்கிறதே'' என்ற மகிழ்ச்சியுடன் காதலர்கள் வெளியே வரும்போது மேற்படி விளம்பரம் அவர்களை நிலைகுலைய வைக்கிறது.

உலக அழகின் நீள அகலங்களை வரையறுத்து அதற்கேற்ப உங்களைச் சுருக்கவோ, விரிக்கவோ உத்திரவாதம் தருகின்ற அழகு நிலையங்கள் பெண்களைக் கவலையுடன் கண்ணாடி முன் நிறுத்துகின்றன.

ஸ்கிரீன் பிரிண்டிங் கற்றுக் கொள்வது எப்படி, 30 நாளில் கன்னடம் ஆகிய நூல்களுடன் 'காதலிப்பது எப்படி' என்ற நூலும் விற்பனையாவதைப் பார்க்கும் போது, உங்கள் காதலர் அல்லது காதலி உங்களை உண்மையாகவே நேசிக்கிறாரா அல்லது இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை உங்கள் மீது பிரயோகித்துப் பார்க்கிறாரா என்ற ஐயம் எழுகிறது.

''எனக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகின்றன என் கணவர் என்னை நேசிக்கிறார். எனினும் இல்லற வாழ்வில் சலிப்பு ஏற்பட்டு அலுவலகத்தில் உள்ள சக ஊழியரோடு தொடர்பு ஏற்பட்டுள்ளது. (எனக்கு 8 வயதில் ஒரு பெண் இருக்கிறாள்) இது சரியா தவறா?'' என்ற வாரப் பத்திரிகைகளின் ஆலோசனைப் பக்கத்தில் வெளிவரும் கேள்விகளைப் படிக்கும் போது பட்டினத்தார் சொன்னது சரிதானே என்ற பயம் ஆண்களுக்கு எழுகிறது.

''இந்தியாவில் மாபெரும் பாலுறவுப் புரட்சி நடக்கிறது. உடலின்பம் குறித்த பழமைவாதக் கண்ணோட்டம் மறைந்து வருகிறது. திருமணமான பெண்கள் முன்புபோல கட்டுப்பெட்டிகளாக இல்லை. திருமணத்திற்கு முன் பாலுறவு வைத்துக் கொள்ளும் பண்பாடு பழமைவாத சென்னை நகரத்தில் தான் இளைஞர்கள் மத்தியில் அதிகமாக நிலவுகிறது'' என்று வெளிவரும் அட்டைப்படக் கட்டுரைகள் நடுத்தர வர்க்க பெற்றோர்களைப் பீதியில் ஆழ்த்துகின்றன. இளைஞர்களின் ஆவலைத் தூண்டுகின்றன.

கடலை மிட்டாய் வாங்கி வரும் தந்தையை விட பைவ் ஸ்டார் சாக்லெட்டை கேட்காமலேயே வாயில் திணிக்கும் தொலைக்காட்சித் தந்தை பாசமுள்ள தந்தையாக மகனுக்குத் தெரிகிறான். பட்டுப்புடவை வாங்கித் தந்து காதலை நிரூபிக்கச் சொல்கிறாள் மனைவி.

கேள்விக்குள்ளாக்க முடியாதவையென்றும் புனிதமானவை என்றும் கூறப்படுகின்ற காதல், பாசம், நட்பு போன்ற மென்மையான மனித உணர்வுகளையெல்லாம் உயிரற்ற ஜடப் பொருட்களின் மூலமாகத்தான் வெளியிட முடியும் என்பதே நிலைமை.

நீங்கள் அதற்கும் தயார். ஆனால் பணம்? பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்று அன்றே சொல்லி விட்டான் வள்ளுவன். எனவே எங்கே செல்வது? மதம் அல்லது சினிமா.

''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள்! நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' - என்று சினிமாக் கொட்டகை வாசலில் எழுதிப் போடப்படவில்லை என்றால் என்ன? இந்த நூற்றாண்டின் மதம் சினிமா. மகனுக்கு தொலைக்காட்சித் தந்தை. அப்பனுக்கு சினிமாக் காதலி.

மனிதனின் உணர்ச்சிகள் என்று சொல்லப்படுபவை அனைத்துமே அவன் உருவாக்கிக் கொண்ட பொருளாதார உறவுகளிலிருந்து பிறந்தவை தான் - காதல் எனும் மென்மையான உணர்ச்சி உட்பட.

பொருளாதார உறவுடன் காதல், குடும்பப் பாசம் ஆகியவற்றைப் பேசுவது நம்மில் சிலருக்கு அதிர்ச்சியளிக்கலாம். அதற்குக் காரணம் காதல் பற்றிய நமது புரிதல் அத்தனை ஆழமாக இருக்கிறது என்பதல்ல; பொருளாதார உறவுகள் குறித்த நமது புரிதல் அத்தனை ஆழமற்று இருக்கிறது என்பதுதான். இது காதலைக் கொச்சைப்படுத்தும் முயற்சி அல்ல; கொச்சைப் படுத்தப்பட்ட காதலைப் புரிந்து கொள்ளும் முயற்சி.

''முதலாளி வர்க்கம் குடும்பத்திடமிருந்து அதன் உணர்ச்சி நய முகத்திரையைக் கிழித்தெறிந்து குடும்ப உறவை வெறும் காசு பண உறவாய்ச் சிறுமையுறச் செய்து விட்டது'' - என்றார் மார்க்ஸ்.

பணம் பணத்தால் வாங்கக் கூடிய பொருள், பொருளால் கிடைக்கக் கூடிய இன்பம் - இப்படி டப்பாக்களில் அடைத்து விற்கப்படும் மகிழ்ச்சியை, நுகர்பொருள் மோகத்தை, சரியாகச் சொன்னால் நுகர்பொருள் வெறியை நமக்கு வழங்கியிருக்கிறது முதலாளித்துவ அமைப்பு.

குடும்பத்தின் நுகர்தல் வேட்கையைத் தணிப்பதற்காக திருட்டு, லஞ்சம், மோசடி ஆகிய எந்த வழிமுறையைக் கணவன் பின்பற்றினாலும் மனைவிக்கு அவன் மீது உள்ள காதல் குறையாது. மகனுக்குப் பாசம் குறையாது. காதல் கணவன் களவாளியாக இருக்கலாம்; சமூகத்தின் விரோதி - குடும்பத்தின் ஒளி விளக்கு!

ஆனால் சமூகத்தின் சேவகன் பாசத் தந்தையாகவோ, காதல் கணவனாகவோ இருக்க முடிந்தால் அது அதிசயம். இல்லாமல் போனால் அது இயற்கை. என்ன வேடிக்கை!

பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறியும் நுகர்பொருளைப் போல மனிதர்கள் ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொள்ளும் இந்தச் சமுதாயத்தில் இந்தப் பயன்பாட்டு விதிக்குத் தப்பி, காதலும், பாசமும் மட்டும் புனிதம் கெடாமல் எப்படி அந்தரத்தில் தொங்க முடியும்?

இப்போது பூனை தன் குட்டியை விழுங்குகிறது. தம்மைத் தவிர மற்றவர்களைப் பண்டங்களாகக் கருதிப் பயன்படுத்தி வந்த தம்பதிகள் இப்போது ஒருவரையொருவர் பண்டங்களாகக் கருதத் துவங்கி விட்டார்கள். தன்னைத் தருவதன் மூலம் பெருமை பெற்ற காதல், இப்போது பெறுவதைத் தனக்கு உத்திரவாதம் செய்யச் சொல்கிறது - விளைவு பாலுறவுப் புரட்சி!

காட்சிக்கு இன்பம் தராத கறுப்பு வெள்ளை டி.வி.க்குப் பதில் கலர் டி.வி வாங்கும்பொழுது பழைய தொலைக்காட்சியு




ஆண்களுக்காக லலிதா நகை மாளிகை திறந்திருக்கும் மார்க் நகைக் கடை விளம்பரம்



படிப்பகம்

www.padippakam.com

டன் தாங்கள் கழித்த இரவுகளை எண்ணி யாரும் உணர்ச்சி வயப்படுவதில்லை.

காதலோடு இருவர் கருத்தொருமித்து இருந்தாலும் உடலின் ரசனையில் மாற்றம் ஏற்படும் போது உள்ளத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது? என்று கேட்கிறது மேற்படி புரட்சி.

டால்ஸ்டாயின் 'கிரெய்சர் சோனாட்டா' என்ற சிறுகதையை இங்கே குறிப்பிடுவது பொருந்தும். நடன விருந்தொன்றில் ஒரு பெண்ணைப் பார்க்கின்ற இளைஞன் ஒருவன் அவளுடைய அழகால் பெரிதும் கவரப்படுகிறான். அவளையும் அவளது தந்தையையும் அறிமுகப்படுத்திக் கொள்கிறான். அன்றிரவு அவனுக்கு உறக்கம் வராத இரவாகக் கழிகிறது. மறுநாள் காலை அவளைப் பற்றிய நினைவுடனேயே கடைவீதியில் சென்று கொண்டிருக்கும்போது ஒரு அப்பாவி இளைஞனை கதறக்கதற ரத்தம் சொட்டச் சொட்ட ராணுவ அதிகாரியொருவன் அடித்து இழுத்துச் செல்வதைக் காண்கிறான். நெருங்கிச் சென்று பார்த்தால், அது அவன் மனங்கவர்ந்த மங்கையின் தந்தை! ஏனோ தெரியவில்லை, அவள் மீது அவன் கொண்ட காதல் கலைந்தே விடுகிறது.

காதலில் உடலின் பங்கிற்கும் உள்ளத்தின் பங்கிற்கும் உள்ள உறவை விளக்கும் இக்கதைக்கு பொழிப்புரை தேவையில்லை. இவ்விசயத்தில் பாலுறவுப் புரட்சியின் அணுகுமுறை என்ன என்பதற்கும் விளக்கவுரை தேவையில்லை.

கணவனையும் மனைவியையும் ஒருவருக்கொருவர் நுகர்வதற்கான பண்டங்களாகக் கருதும் இந்த இன்பத்தாகம், இன்றைய ஆணாதிக்க சமூகத்தில் பெண்களுக்குத்தான் எதிராக இருக்கும்.

இந்த வடிகட்டிய தனி நபர்வாதத்தை என்ன உறவென்று அழைப்பது? காதல் என்றா? உடலின்ப வேட்டை என்றா?

மனிதன் விலங்கிலிருந்து வெகுதூரம் வந்து விட்டான். உண்மைதான். எனினும் முதலாளித்துவம் உற்பத்தியில் ஈடுபடும் 'விலங்குகளைத்' தான் உருவாக்குகிறது.

இவையெல்லாம் அமெரிக்காவின் பண்பாட்டுத் தோல்விகள். நமது பண்பாடு இவற்றை வெற்றி கொள்ளும் என்று சிலர் தங்களைத் தேற்றிக் கொள்ளலாம். ஆனால் காதல் கோட்டையின் வெற்றி நமது பண்பாட்டின் தோல்வியைத் தான் நிரூபிக்கிறது.

காதல், அன்பு, பாசம் போன்ற உணர்ச்சிகள் எந்த அளவிற்கு இதயமற்றுப் போகிறதோ அந்த அளவிற்கு முதலாளித்துவக் கலை இலக்கியங்களில் அற்ப உணர்ச்சிகளின் (சென்டிமெண்ட்) ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது.

பார்த்துப் பழகி வளர்ந்த காதல் தோற்றுப் போனதற்குரிய காரணங்களை ஆராயத் தொடங்கினால் அது காதலன் அல்லது காதலி பற்றிய ஆராய்ச்சியுடன் முடிவடையாமல் காதல் குறித்த ஆராய்ச்சியாக மாறி அச்சமூட்டுகிறது.

இதுவரை கொண்டிருந்த சமூகக் கண்ணோட்டங்களையே கேள்விக்குள்ளாக்கி நிலை குலைய வைக்கும் ஆராய்ச்சியை விட, பார்க்காமலே தோன்றி வளர்ந்து வெற்றி பெறும் காதல் நிழற் கோட்டையில் இளைப்பாறுவதே ரசிகனுக்கு சுகமாக இருக்கிறது.

புதிய அர்த்தங்கள் கொண்ட உறவை முதலாளித்துவம் உருவாக்க முடியாது; பழைய உறவுகளுக்கு புது அர்த்தம் கற்பிக்க, போதையூட்டத்தான் முடியும்.

இது கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் கதை என்கிறார் இயக்குனர் அகத்தியன். அது மட்டுமா, கம்பராமாயணமும் கூடத்தான்.

**குடும்பத்தின் நுகர்தல் வேட்கையைத் தணிப்பதற்காக திருட்டு, லஞ்சம், மோசடி ஆகிய எந்த வழிமுறையைக் கணவன் பின்பற்றினாலும், மனைவிக்கு அவன் மீது உள்ள காதல் குறையாது. மகனுக்குப் பாசம் குறையாது. காதல் கணவன் களவாணியாக இருக்கலாம்; சமூகத்தின் விரோதி குடும்பத்தின் ஒளிவிளக்கு.**

தனது காதலன்தான் இவன் என்று தெரியாத போதும், கதாநாயகனைச் சந்திக்கும் போதெல்லாம் அவன்பால் நாயகியின் மனம் ஈர்க்கப்படுகிறது - கற்பின் மகிமை! இருந்தாலும் தன் காதலின் புனிதத்தைக் காக்கும் பொருட்டு அவனை வெறுப்பது போல நடிக்கிறாள் - கற்பின் உறுதி! கம்பனின் 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' சீன் தான்.

இந்தக் கற்புக்கனலின் சூடு தாங்காமல் ரசிகர்கள் ஓடிவிட்டால் என்ன செய்வது என்ற கவலையின் காரணமாக காதாநாயகனின் நண்பனையும் கொஞ்சம் பேச விடுகிறார் இயக்குனர்.

''என் மனைவி இழுத்துப் போத்திக் கிட்டு இருக்கணும்; அடுத்தவன் மனைவி அவுத்துப் போடணும்னு எல்லாரையும் போல நெனைக்கிறவன்தான் நான். ஏன்னா நான் ஒரு சராசரி இந்தியன்.''

''நானும் கல்யாணம் பண்ணிக்குவேன். ஆனால் மாதுரி தீட்சித்தையும், ஸ்டெபி கிராபையும் காதலிப்பேன். ஏன்னா நான் சராசரி இந்தியன்''.

அரங்கத்தில் அமர்ந்திருக்கும் சராசரி இந்தியர்கள் யாரும் இந்த வசனத்தைக் கேட்டுத் துணுக்குறவில்லை. கைதட்டுகிறார்கள். சராசரி இந்தியனின் காதல் ஒழுக்கம் இதுதான் என்று தெளிவுபடுத்தப்பட்டு விட்டதால், ஏற்கனவே இது விசயத்தில் குழப்பமடைந்திருந்தவர்கள் கூட மனத் தைரியம் பெற்று விட்டார்கள்.

அருகில் அமர்ந்திருக்கும் சராசரி இந்தியனின் சராசரி மனைவிமார்களின் காதல் ஒழுக்கம் என்ன? அவர்கள் கமலஹாசனை அல்லது டெண்டுல்கரைக் காதலிக்கலாம்.

''இலக்கணத்தில் இரண்டு எதிர்மறைகள் உடன்பாட்டுப் பொருள் ஆவது போல, திருமண ஒழுக்கங்களில் இரண்டு விபச்சாரங்கள் ஒரு நன்னெறி ஆகின்றன'' என்று எங்கெல்ஸ் முதலாளித்துவ சமூகத்தின் குடும்ப உறவுகளைக் கேலி செய்தது எவ்வளவு பொருத்தம்!

காதல் தேசத்தின் மாணவர்களோ காமவெறி கொண்ட பொறுக்கிகளாகவும், மாணவிகள் அந்தப் பொறுக்கித்தனத்தால் கிளர்ச்சியூட்டப்படும் சந்தோஷமான ரசிகைகளாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். இதை இளமையின் கலகத்துக்குக் கிட்டிய அங்கீகாரமாக எண்ணி மகிழ்கிறார்கள் மாணவ மாணவிகள்.

'புனிதமற்ற' முறையில் காதலித்து, அநாகரிகமான முறையில் அடித்துக் கொண்ட காதலர்கள், கடைசி காட்சியில் காதலைக் கைவிட்டு, முன்னாள் காதலியுடன், புனிதமான நட்பில் இணைந்து திரையின் உள்ளே நடந்து சென்று புள்ளியாகக் கரையும் போது, அவர்களைப் பின்தொடர முடியாத மாணவர்கள், அரங்கவாயிலை நோக்கி, எதார்த்த வாழ்வை நோக்கி, எதிர்த் திசையில் புறப்படுகிறார்கள்.

காதல் கோட்டை - அற்ப உணர்வின் இடையில் தூவப்பட்ட பொறுக்கித்தனம்.

காதல் தேசம் - பொறுக்கித்தனத்தின் வாலில் கட்டப்பட்ட அற்ப உணர்வு.

''என் மனைவியும் மகளும் படத்தில் ஒன்றிப் போய் விட்டார்கள். எனக்கோ சகிக்க முடியவில்லை'' என்று அரற்றினார் குடும்பத்துடன் காதல் தேசம் பார்க்கப் போன ஒரு நண்பர்.

தன்னுடைய மனக்குமுறலை தனது மனைவி மகளுடன் அவர் மனம் விட்டுப் பேசியிருக்கலாமே; பேச முடியாது. தந்தைக்கும் மகளுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நிலவும் 'அநாகரிக இடைவெளி'யைக் கடக்க சராசரி இந்தியர்கள் முயற்சிப்பதில்லை.

அந்த இடைவெளியில்தான் பாரதப் பண்பாட்டின் 'உன்னதமும்', கோடம்பாக்கத்தின் பணப்பெட்டியும் உயிர் பிழைத்திருக்கின்றன. • மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

2-ம் பக்க தொடர்ச்சி...



• செம்பதாகையின் கீழ் பண்பாட்டு படை அணிவகுத்து வருகிறது •

சாட்டைவீசின மகஇக கவிஞர் துரை. சண்முகத்தின் கவியரங்கத் தலைமைக். கவிவரிகள். 'ஜஜ்ஜனகு ஜஜ்ஜனகு' என்று கொட்டி முழங்கிய பறைகளின் கம்பீரக் கூட்டொலியும், அதனோடு இணைந்து தழுவி ஆற்றொழுக்காய்ச் சென்ற காற்ச லங்கை, குழல் ஒலிகளும் புரட்சிக் கலை வடிவ முத்திரைகள்.

இரண்டாம்நாள் மாலை கலைஞர் கருணாநிதி நகர் அசோகத் தூணிலிருந்து கிளம்பிய சுமார் 2500 புரட்சி ஊழியர்க ளின் ஊர்வலம் தொழிலாளர்கள் நிரம் பிய குடிசைப் பகுதிகள் வழியாக பார்ப்ப னீய இந்துமதவெறி மற்றும் ஏகாதிபத்தி யக் கலாச்சாரத் தாக்குதலைச் சாடிய முழக்கங்களோடும், மகஇக மையக் கலைக் குழுவின் ஆட்டத்தோடும், பீகார் சந்தால் பழங்குடியினரின் வில்வீச்சு ஆட் டத்தோடும் பேரெழுச்சியாகச் சென்றது.

மாநாட்டின் முத்தாய்ப்பாக, தேர டித் திடலில் நிரம்பி வழிந்த கூட்டத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் வரவர ராவ் அவர்களைப் பொதுச் செய லராகக் கொண்ட புதிய செயற்குழு அறி முகம் செய்யப்பட்டது. பெருமழைக் கூத்தை ஊடறுத்து புரட்சி இசை அங்கே முழங்கியது. அக்.11 விடியலை முன் அறிவித்து மாநாட்டு நிகழ்ச்சிகள் நிறை வுற்றன.

மகஇக, மபபே, மகம மூன்று அமைப்புக்கள் கூட்டுத் தலைமை ஏற்று நடத்திய அஇபுபஇ ஆறாவது மாநாடு ஓர் எழுச்சி ஓவியம்! •




• 'இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் நக்சல்பாரிகளே' – பீகார்த் தோழர்களின் கலை நிகழ்ச்சி •

## காலிகளுக்கு எதற்கடா கவிஞர் பட்டம்?

சென்னை உயிரியல் பூங்கா வில் தனியாக வைக்கவேண்டிய சீக்கு பிடித்த மிருகங்கள் இரண்டு கோடம் பாக்கத்தில் உலவிக்கொண்டிருக்கி றது, ஒன்று வாலி; இன்னொன்று வைர முத்து. இந்த இனப்பெருக்கம் இப் போது பழனிபாரதி என்ற புதுக்குட்டி யையும் போட்டுள்ளது.

தெருவில் போகிற வருகிற பெண்களைப் பார்த்து இட்டுகட்டி பாடும் காலிகளைப் பார்க்கும்போது ஆத்திரம் வருவதுபோல, இந்த 'கவி ஞர்'பயல்களின் காலித்தனத்தைக் கண்டு சகிக்க முடியாமல் அனைவ ரும் ஆத்திரம் கொண்டுள்ளனர். இதில் ஒன்றுதான் பாமரன் என்பவர் எழுதிவெளிவந்துள்ள ''வாலி + வைரமுத்து = ஆபாசம்'' எனும் நூல்.

சினிமாவுக்கு அப்பால் 'சமூக உணர்வுள்ள' கவிதைகள் என்று இலக் கியவாதி வேதமும், சினிமா பாட்டு என்ற பெயரில் பொறுக்கித்தனத்தை யும் பிழைப்பாக்கிக் கொண்ட இரட் டைவால் அம்பி வாலியும், 'தமிழுக் குச் சோறு போடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு தமிழை நாறடிக் கிற வைரமுத்துவும் எழுதியுள்ள சினிமா பாடல்களை வகைப்படுத்தியி ருக்கிற இந்நூலின் பக்கங்களை படிக் கும்பொழுது இவர்களை இன்னும் விட்டுவைக்கலாமா? எனும் உணர்வே மேலோங்குகிறது.

உண்மையில் கதாநாயகியை கதாநாயகன் பார்த்து ஆடுவதற்கு முன்பே இந்த கயவாளிகள் கதாநாய கியை அருவருப்பாகப் பார்த்து, அதையே ரசனையாக மக்கள் மத்தி யில் பரப்புகிறார்கள்.

ஏனடா எழுதினாய் என்றால் தயாரிப்பாளர் சொன்னார், இயக்குநர் சொன்னார் நான் எழுதினேன் என்று தப்பித்துக் கொள்கிறார்கள். சின்னத்தி ரையும், பெரியத்திரையும் சீரழிவுக்கு போட்டிபோடும் இத்தருணத்தில் இந்த காலிகளுக்குக் கொடுக்கும் முதல் அடியில் கலங்கட்டும் திரையுல கம்.

நூல்: வாலி + வைரமுத்து = ஆபாசம்
வெளியீடு: பினாங்கு பயனீட்டாளர் சங்கம் - ரூ. 15.

• கிடைக்குமிடம்:
கீழைக் காற்று,
10, ஔலியா சாகிப் தெரு,
சென்னை - 2.

அறிவிப்பு: பொது சிவில் சட்டம் - மாயையும், உண்மையும் கட்டுரை யின் இறுதிப் பகுதி அடுத்த இதழில் இடம் பெறும்.


படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N. 42647/87 REGD. NO. TN/MS(N) / 942

# பூக்காயம்



பூக்களை சும்மா
புகழ்ந்து தள்ளாதீர்கள்
ரெண்டுவேளை பாடுக்காய்
மணிக்கணக்கில் பூ கட்டி
நகக்கணுக்கள் வலியெடுக்க
அதைவிட பயங்கர ஆயுதம்
அப்போது வேறேதுமில்லை.

மல்லிகையை சரம்தொடுத்து
மரிக்கொழுந்தை காம்பொடித்து
சில்லரைக்கு ஏங்கி நிதம்
வெய்யலிலே காய்கையிலே
மனம் வாடும், பூ சுடும்

கருவகுச்சி ஒடிச்ச கையில்
கனகாம்பரம் கட்டும்போது
உரசும் பூ இதழ்கள்
உள்ளங்கையை நோகடிக்கும்

முல்லரும்பு எனக் கூவி
முடுக்கெல்லாம் சுற்றிவந்து
நல்லவிலை விற்பதற்குள்
நாடி நரம்பெல்லாம் - பூ வலிக்கும்

ஈரவிறகை ஊதி ஊதி
இடையிடையே பூத்தொடுத்து
சோறுதிங்க கையெடுத்தால்
பூவாசம் குமட்டும்

தண்ணீர் தெளித்துவைத்து
தருகின்ற பூக்களெல்லாம்
கண்ணீரால் கட்டியதால்
கசங்காமல் இருக்குதென்று
காரணம் அறிவீரா!

பூத்தொடுக்கும் போதே
முரண்டு பிடிக்குது மொட்டுகள்
வாழ்க்கை போர் தொடுத்தபோதும்
பொறுமையாய் இருக்கச் சொல்லி
யாரும் எங்களுக்கு பூ சுற்றவேண்டாம்.

♦ துரை சண்முகம்

முகப்போவியம்: மருது